உ

சிவமயம்,

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# சுண்ணம் 300-க்கு சூஸ்திரச்சுருக்கம் 155 செந்தூரம் 300-க்கு சுருக்கம் 50.

இஃது

மதுரை யானைக்கல் தெரு, வித்வான்
மு. குழந்தைவேலுப் பிள்ளையவர்கள்
ஏட்டுப்பிரதியைவைத்து

மதுரை வித்வான்
த. குப்புசாமி நாயுடு அவர்களால்
பரிசோதிக்கப்பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்
இ. ராம.
குருசாமிக் கோனார்
அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசிவீதி
ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1921 [அணா 10

ரிஜிஸ்டர் காபிரைட்.

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

சுண்ணம் ௱-க்கு

# சூஸ்திரச்சுருக்கம் ௧௫.

முக்தனிற் சூல்பாதந் துதியேசெய்து
முந்நூறுசுண்ணமென்ற காண்டந்தன்னை
வித்தகமாய்ச்சுருக்கியே சுருக்கமாக
வினையமாய்நூத்தன்பத் தஞ்சதாக
சித்தம்வரச்சுண்ணமுடன் செந்தூரங்கள்
செயமாகக் கருவோடு செய்கைபாகம்
சத்தியமாய்ச்சொல்லிவிட்டே னிந்தநூலை
தனையோதவாதவருந் தகமையாமே (1)

தகமையெற்றயிந்தநூத் தன்பத்தஞ்சில்
தாட்டிகமாய்முன்சொன்ன சுண்ணம்வைத்து
உகமையாய்சரக்குகளைக் கட்டிநீயும்
உறுதிபெறக் களங்குச்செந் தூரம்பண்ணு
பகமையில்லா வாதம்வரும் புடமிறங்கும்
பருதியுள்ள மட்டுக்கும் வாழலாகும்
செகமெய்க்கும் உண்டுடுக்க லாகுங்கண்டாய்
சீர்பெறவே யாகோபு சொன்னார்தானே. (2)

சொன்னதொரு முன்னூரில் துத்தந்தன்னை
சகம்பெறவே சொல்லிவிட்டேன் திறமைதன்னை
நன்னயமா யிந்தநூத் தன்பத்தஞ்சில்
நாடியே துத்தத்தை சுண்ணம்பண்ணி
கன்னலென்ற தாளகத்தைக் கட்டிநீயும்
கருத்துறவே வங்கத்திற் சேர்த்துக்கட்ட
முன்னியே ரவிபழுக்கும் வேதையாகும்
முக்கியமா யாகோபு மொழிந்தவாறே,

78415

மொழிகேட்டு நபிமார்கள் யாகோபென்று
முக்கியமாய்க் கைகுடுத்து முத்தமிட்டு
வழியாகச் சொன்னதொரு யிந்தநூலை
வண்மையாய்க் கிழிக்கவே சொன்னபோது
பழியாகச் சொன்னார்களென்றுசொல்லி
பத்தியே நானொளித்து வைத்துத்தானும்
விழிபோல உலகத்து வாதிக்கித்தான்
வீம்பாகக் குடுத்துவிட்ட விதமுமாமே.

விதமாக யேழையாம் வாதிமார்கள்
விரும்பியே யிந்தநூல் தன்னைப்பார்த்து
அதமாகச் செய்திட்டு பிழைக்கவென்று
அடவாக அல்லாவுக் கொப்பாய்ச்சொன்னேன்
நிதமாகக் கைபாக வரிசைகண்டால்
நீநிலத்திற் பெரியநபி யாகுவீர்கள்
அதமாக யெப்பொருளும் பார்த்துத்தேற
ஆதியாங் குருவாமென் றறையலாமே.

துருசு சுண்ணம்.

அறையுறேன் துரிசுனுட சுண்ணந்தன்னை
ஆண்மையாய் அல்லாவுக் கொப்பாயப்பா
பறையாதே உலகத்திற் முறட்டுவாதி
பாகத்தைச் சொல்லாதே பலனுமில்லை
சிறைபோலக் காத்திருந்த வாதிக்கித்தான்
சீராகச் சொல்லிவிடத் திறமுமாகும்
முறைபோலச் செய்திடுவான் முடிப்பானப்பா
முத்தியா யாகோபு விளக்கமாமே.

விளக்கமா யாகோபு சொன்னநீதி
விதமாக ரசவாதஞ் செய்யவென்றால்
பழக்கமா யிந்தநூல் தன்னைப்பார்த்து
பதிவாகச் சத்துருமித் துருவழிந்து
தளக்கமாய்ச் சாக்குகளைப் பார்த்துநீயும்
தடையறவே சாக்குகளைச் சுட்டுச்சுட்டு
இளக்கமாய்க் கைபாக வரிசைகண்டு
யிதமாகச் செய்திடவே யியற்கையாமே.



இயற்கையாய்ச் சாக்கதனைச் சுட்டுப்பாரு
யிதமான சாஸ்திரத்தை யெடுத்துஓது
அயற்கையாய்ச் சொன்னபடி பார்த்துநீயும்
அடவாக அனல்தனிலே சாக்குக்கட்டி
நயற்கையாய் கைபழகு பணத்தைப்போட்டு
நயமாகச் சுட்டுமே நாட்டிற்றானும்
துயற்கையா யலைந்துமே கேட்டுநீயும்
துடியாகப் பாகமாய்ச் செய்திடாயே (8)

செய்திடவே துரிசினிட சுண்ணங்கேளு
துடியாகுங் கைபாக வரிசைகேளு
பைதிடவே சவுக்கார மில்லாப்போனால்
பதையாமற் கொல்லாது துருசுதன்னை
வெய்திடவே வெல்லாது நீரிடாது
வேதையுந்தான் வாராது வெற்றியில்லை
கைதிடவே சவுக்காரம் யெண்ணெய்வாங்கக்
கதிபெறவே சொல்லுகிறேன் கண்டுகொள்ளே. (9)

சவுக்காரம் யெண்ணெய் கழட்ட.

கண்டுகொள்ளு பூனீறுபடியும் றெண்டு
கற்சுண்ணம் படிரெண்டு சட்டியிட்டு
பண்டுபடப் பாணியது படியும்யெட்டு
பதிவாக யிட்டுமே கலக்கிநீயும்
துண்டுபடத் திரிநாள்வை பின்புநீயும்
துடியாக நீருதனை யிருத்துப்பின்பு
கொண்டுபடத் தத்தமது சேருமொன்று
குணமாகக் கரியில்வைத்து வடிக்கொள்ளே. (10)

துத்தசுண்ணம்.

ஊதியே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
உடனெடுத்து முன்னிருந்த சவுக்காரத்தில்
வாதியே துத்தமென்ற சுண்ணமிட்டு
வடிவாக ஒட்டயெரி குளம்புபோல
காதியே அகப்பையினால் துளாவிக்காய்ச்சி
நலமாகச் சேறுபோல் பருவம்பார்த்து
கோதியே சாம்பலது பொடித்துநீயும்
குணமாகச் சுளுக்குதனி லிட்டிடாயே. (11)

இட்டுமே சாணுசாஞ் சாம்பல்தன்னில்
    யிதமாக அதின்பேரில் துணிவிரித்து
கட்டுமே சட்டிதனில் காச்சுகின்ற
    கனிவான சவுக்காரக் குளம்புதன்னை
பட்டுமே அகப்பையினால் மொண்டுவூத்து
    பதிவாகப் பத்துண்டை யாகவூத்து
தட்டுமே மேலுமந்தச் சீலையிட்டு
    தடையறவே யெடுத்துமே பார்த்திடாயே. (12)

பஞ்ச சுண்ணம்.

பார்த்திடவே எண்ணைக்கும் உண்டைபோலே
    பதிவான விளாங்காய்போ லுருட்டிநீயும்
வத்திடவே ரவிதனிலே காயவைத்து
    யேழைமதி போகாமல் பின்புநீயும்
கோத்திடவே அஞ்சுசுண்ணம் வைக்கக்கேளு
    குணமாகக் கிளிஞ்சியொடு அண்டஞ்சங்கு
காத்திடவே நத்தையொடு சுக்கான்கல்லு
    நலமாக வகைக்கிஒரு சேருஒன்றே. (13)

சேரொன்று கல்லத்தி லிட்டுநீயும்
    சிறப்பாகச் சுண்ணாம்பு தண்ணீர்விட்டு
பாரென்று யிருசாம மறைத்துவில்லை.
    பதிவாகத் தட்டியே காயவைத்து
நாவென்று கரியில்வைத்து நல்லாயூது
    நலமாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரு
வாரென்று அஞ்சுசுண்ண மாகும்பாரு
    வடிவாக வகையதனை வழுத்தக்கேளே. (14)

சவுக்கார சுண்ணம்.

வழுத்தவே முன்வைத்த சவுக்காரத்தில்
    வகையாக உண்டைமேல் சொல்லக்கேளு
கழுத்தவே அஞ்சுசுண்ணங் கவசமிட்டு
    நலமாகக் கட்டியே காயவைத்து
அழுத்தவே பத்தெருவி லடுக்கிப்போடு
    அன்பான சவுக்காரச் சுண்ணமாச்சு
பழுத்தவே மேற்கவசந் தள்ளிப்போடு
    பதிவாக உண்டைதனைப் பதியவாங்கே. (15)



தாங்கியே பிங்கானி லிட்டுப்பாரு
    வடிவாகப் பூப்போலே பொருமிநீரும்
தாங்கியே சகலமுந்தான் சுண்ணமாகும்
    தடையில்லாச் சவுக்காரம் ஆடுமாட்டு
ஏங்கியே வழலையென்ற சுண்ணமாச்சு
    எளிதாகத் துருசதுவுஞ் சுண்ணமாகும்
பாங்கியே துத்தத்தின் மார்க்கந்தன்னை
    பதிவாக பாத்திடிலோ பலனுமாமே. (16)

பலனாக வழலைதா னிதுவேயாச்சு
    பத்தியாய்ச் சவுக்கார மிதுவேயாச்சு
கலனாக வெள்ளையென்ற சாரையாச்சு
    கருத்துன்ளே நபிமார்கள் வைத்துக்கொண்டு
நலமாகச் சவுக்காரம் வேறேயென்று
    நாட்டிகமாய்ச் சொல்லிவிட்டார் உலகவாதி
பலமாகப் பூனீற்றை யெடுத்துக்காச்சி
    பத்தியா யலைந்துமே மாளாவாரே. (17)

துருசி சுண்ணம்.

மாளாமல் முன்வைத்த சவுக்காரத்தை
    மதியாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
தேளாக் கிரமது நாலத்தொன்று
    சேர்த்துஅரை சிவப்பாகும் பின்புநீயும்
காளாகத் துருசியென்ற கட்டிமேலே
    காரியமாய் லேபித்துக் கதிரில்வைத்து
பாழாகப் போகாமல் அதிலேபின்பு
    பதிவாக அஞ்சுசுண்ணங் கவசங்கட்டே. (18)

கட்டியே கதிரில்வைத்துக் குக்குடத்தில்
    கனிவாகப் போட்டுமே பின்புநீயும்
தட்டிப்பார் துருசதுவுங் கொக்குப்போலே
    தானிருக்கும் அல்லாவைத் தொழுதுபோற்று
முட்டியே கொஞ்சமெடு கையில்வைத்து
    முனையான யாணிதனைக் கொஞ்சம்விட்டால்
கட்டியா யாயிரந்தேள் கொட்டல்போல
    அடியாக யிருந்திடுமே தன்மைதானே. (19)

உண்மையா யித்துருசு காலனுக்கும்
உறுதியால் நபிமார்கள் துருசுதன்னை
தண்மையாய்ச் சுண்ணத்தை வைத்துப்பின்பு
தடையறவே மக்காவின் மேலவாசல்
வண்மையாய்க் கோட்டையது கட்டினூர்கள்
வடிவாக மதிலெல்லாந் தங்கமாகும்
பெண்மையாய்த் துருசினுட சுண்ணப்போக்கை
போக்கோடே ஒருவருக்கும் பேசொண்ணுதே.

### தாளகச் சுண்ணம்.

பேசவே துருசினுட சுண்ணந்தன்னை
பெலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
தாசமாய்ப் புகைநீரை விட்டுஆட்டி
தாளகத்தைப் புறட்டியே குறட்டினூலே
வாசமாய்க் கதிரில்வைத்துப் பின்புநீயும்
வடிவாகக் குக்குடமாய்ப் போட்டுப்பாரு
நாசமாய்த் தாளகமுஞ் சுண்ணமாகும்
நமன்விலகும் பாருலகில் நடத்தையாமே.

நடத்தையாய்த் தாளகமும் நீறித்தானல்
நாடுதனில் மண்ணோடு விண்ணுமெல்லாம்
படத்தையாய்ப் பொன்னாகும் லோகந்தன்னில்
பதிவாகப் பாச்சிடவே நீறிப்போகும்
கடத்தையா யுபரசங்க ளெல்லாம்நீறும்
கணக்குண்டோ சச்சரக்குங் கட்டிநீறும்
குடத்தையிட்டுத் தண்ணீரை முகத்தல்போலே
கொள்ளையே கொள்ளையிதில் வாதந்தானே;

### தங்க சுண்ணம்.

தானென்ற தாளகநீர் களஞ்செடுத்து
தடையறவே உமிநீரால் மத்தித்தேதான்
வானென்ற ஏமத்தைத் தகடுவாங்கி
வடிவாக அதன்பேரி லப்பிப்பின்பு
கானென்ற காடையென்ற புடத்திலிட்டால்
கதிபெருக வெடுத்துப்பார் யேமராசன்
பானென்றே நீறிவிடும் பகரப்போகா
பச்சிமத்தி தாளகத்தி நீறுதானே.



சீறுதான் யேமமென்ற சீறுதன்னை
நிலையாக ரவிநாறு ஒன்றுருக்கி
காறுநீ ஒன்றிட்டு உருக்கிப்பாரு
கண்கொள்ளா மாத்தாகுங் கண்டுகொள்ளு
பாறுமேபோகாது யிடைதான் வெள்ளி
பாச்சிவிட்டு உருக்கிநீ யெடுத்துப்பாரு
ஆறுமே மாத்தென்ன பத்துமாகும்
அடவாகப் புடமிரங்கும் ஆண்மையாமே.

ஆண்மையாய் சவுக்காரம் வைத்துநீயும்
ஆடினுல் நபிமார்கள் அன்புமெத்த
தாண்மையாய்த் துருசதுவை நீத்திப்பின்பு
தடையறவே தாளகத்தைப் பின்னேநீத்தி
பாண்மையா யதின்பின்னே தங்கம்நீத்தி
பாருலகில் நபிமார்கள் தங்கஞ்செய்தார்
வாண்மைபெற யிப்படிக்கிப் பார்த்துத்தானும்
மதிப்பான நபிபிலெட்சம் பகாலாமே.

பகரவே வழலைவிட்டால் வாதம்பொய்யாம்
படிப்படியா யேறுதற்குப் பலிதமில்லை
உகரவே கட்டினமு முருக்கினமுமில்லை
ஓடாசுக் காணில்லாக் கப்பலாகும்
தகரவே பாயில்லாக் கப்பலாகும்
தாட்டிகமாய்க் காலில்லா மனிதராகும்
துகரவே மரமேறிக் கைவிட்டாக்கால்
துடியொக்குஞ் சவுக்காரம் விட்டபேர்க்கே.

விட்டபேர் தனையொக்கும் வாதமாட்டு
விதமாக வழலையென்ற சுண்ணத்தாலே
பட்டமது சீர்தப்பில் பாங்காய்ப்பாரு
பதிவாகத் தானுடும் வழலைமார்க்கம்
கெட்டபேர் தான்விட்டுப் புலம்புவார்கள்
கேள்விதா னறியாமல் சுட்டுக்கெட்டு
மூட்டவே நூல்களெல்லாம் பொய்தானென்று
மூதறிவு யில்லாமற் பேசுவாரே.

பேசுவா ருலகத்தில் வாதிதானும்
பிரித்துமே சாஸ்திரத்தைப் பாருதாலே
ஏசுவார் அழுதிடுவார் துப்பிவைவார்
ஏதுமில்லா உலுத்தரவர் வாதிதானும்
காசுபணம் பேச்சென்பார் சவுக்காரத்தை
கானமென்பார் கைபாகந் தெரியாதாலே
வேசிதான் சொன்னதுபோல் சொல்லிச்சொல்லி
வேதாந்த மார்க்கமாய்த் திரிகுவாரே.

திரிகுவார் சண்டைசெய்வார் சீசமாவார்
திட்டியே கெட்டமென்பார் நூலைக்காணார்
பிரியமாய்ச் சொல்லிவிட்டுப் பிரட்டுப்பேச்சு
பேதையர்போல் புலம்பியே பிரண்டுருண்டு
விரியமாய் பின்னையொன்று பார்ப்பமென்பார்
விதமில்லார் பதமில்லார் விருப்பமில்லார்
சரியாக காரியத்தை யறியான்றன்னை
தானடிப்பாய் ஆயிரத்தின் காலிதானே.

### தாம்பூரச் சுண்ணம்.

தானென்ற தாளகநீர் தன்னையெடுத்து
தாட்டிகமாய்க் கல்வமிட்டு வாய்நீராலே
கானென்ற தாம்பூரத் தகட்டில்பூசி
கனியவே காடையென்ற புடமுமிட்டால்
நானென்ற தவளம்போல் நீறுமாகும்
நாடியே நவலோகம் நாந்துக்கொன்று
பானென்று யிட்டுருக்கு யெல்லாந்தங்கம்
பதிவாகயெடுத்துவித்து செலவுசெய்யே.

### சூதக்கட்டு.

செலவுசெய்து நபிசொத்தைத் தின்றுநீயும்
திடமாக யிருந்துமே சொல்லக்கேளு
நலமாக விருலியிலே தன்னைப்பிடுங்கி
நன்மையாய்த் தாம்பரத்தின் சுண்ணங்கொஞ்சம்
வலமாக யிட்டுமே பிசைந்துவைக்க
வடிவாக நீராகும் வண்மைபாரு
கலனில்லா நீரையிறு பின்புதானும்
கனிவாகச் சூதமொரு சேருவாங்கே,

வாங்கியே காண்டியிட்டு விராலிநீரை
வகையாக விட்டுநீ மார்க்கங்கேளு
தாங்கியே சூதந்தான் முழுகவிட்டு
தளம்பவே அடுப்புதனில் கொதியிட்டாக்கால்
தூங்கியே சூதமது கட்டிப்போகும்
துடியாக உருக்கியே மத்தங்காயில்
நீங்கியே வுள்வைத்துப் புடமும்பத்து
நீதமாய்ப் போட்டுநீ யெடுத்துப்பாரே. (32)

### ரசமணி.

எடுத்துப்பார் பால்போலே தானிருக்கும்
பிதமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
அடுத்துமே வெள்ளிபோல் கண்விட்டாடும்
அதையெடுத்துச் சண்டக்கா யளவதாக
படுத்துமே மணியிருபத் தொன்றுருக்கி
பதிவாகக் கயருதனில் கோர்த்துநீயும்
தடுத்துமே முடிச்சுத்தான் யிருபத்தொன்று
தப்பாமல் போட்டுமே தாக்கிடாயே. (33)

தாக்கிடவே கையதனில் வைத்துநீயும்
தடையறவே மகமதுவை நோக்கிப்பின்பு
வாக்கிட்டுப் பிசுமில்லா ரகுமானென்று
வகையாக ஐந்துதிரந் தொழுதுநீயும்
நோக்கிட்டுக் கால்மடித்துக் கையைநீட்டி
நுணுக்கமாய் காதுதொட்டு கண்ணைத்தொட்டு
சொக்கிட்டுத் தொழுதுநீ போற்றப்போற்ற
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே. (34)

### களங்கு.

தொழிலாகக் கட்டினதோர் சூதம்நாலு
தோத்தரித்து யெடுத்துமே குகையிலிட்டு
வழியோடே உருக்கிடவே உருகிநிற்கும்
வடிவாக நாலுக்கு ஒன்றுதங்கம்
துழியாகத் தங்கமிடை நாகம்போட
தப்பறவாய் வாங்கியே உருகிநிற்கும்
புழியாக யெடுத்துப்பார் களங்கமாகும்
யாச்சிடவே நவலோகம் யேமமாமே. (35)

ஏமமாம் நாற்றுக்கு ஒன்றுயீய
யென்நபிமார் சொன்னதிது ஆணிக்கொக்கும்
வாமமாம் உப்புக்குங் காவிக்கப்பா
வடிவாக யிருந்துவிடும் வண்மைமெத்த
தாமமா யிதைவித்துச் செலவுசெய்து
தாக்கிட்டுச் செந்தூரம் பண்ணக்கேளு
காமமாய்ச் சூதமுண்ட களங்குதன்னை
நாடியே பலம்கிறுத்துக் கல்வத்திட்டே. (36)

### வெடியுப்புத் திராவகம்.

இட்டுமே புகைநீர்தான் ஒன்றுகேளு
பிதமாக வெடியுப்பு பலமும்பத்து
கட்டுமே சீனமது பலமுங்கேளு
கனிவாக யிருபத்து அஞ்சுமாகும்
நட்டுமே கல்வத்தி லிட்டுக்கேளு
நலமாகப் பொடியாக்கிக் கலைத்திட்டு
முட்டுமே வாலையென்ற சட்டிமூடி
முனிவாக உளுந்தாலே சீலைசெய்யே. (37)

செய்துமே அடுப்பில்வைத்து யெரித்துவாங்கு
செயமாக முன்னீர்தான் வெள்ளையாகும்
பைதுமே வெள்ளையைத்தான் தள்ளியிட்டு
பாங்குபெற மஞ்சள்நீர் வருகுமப்பா
வைதுமே மஞ்சளது நீரைத்தானும்
வடிவாகப் பிடித்துமே குப்பிதன்னில்
நைதுமே அடைத்துவைத்து மறுநாள்தானும்
நலமாகச்சொல்லுகிறே னுட்டுள்ளோரே. (38)

### களங்குச் செந்தூரம்.

நாட்டியே முன்புவைத்த களங்கிலிட்டு
நலமாக யிருசாமங் கரையவாட்டி
வாட்டியே பீங்கானில் உமியில்வைத்து
வடிவாக வருத்துமே காசிக்குப்பி
நாட்டியே அரைவாசி அரைத்துநீயும்
நலமாகச் சீலைமண்தான் பிலக்கச்செய்து
பூட்டியே பணிரெண்டு சாமந்தீதான்
போட்டாத்தி யெடுக்கச்செந் தூரமாமே. (39)



செந்தூர மாகுமது முருக்கம்பூபோல்
செல்வமது நவலோகம் நாற்றுக்கொண்டு
பந்தூர மிட்டுமே உருக்கிப்பாரு
பகலவன்போல் நிரமாகும் பத்துமாத்து
நந்தூரம் உப்புக்குங் காவிக்குந்தான்
நலமாக யிரங்குமது நபிமார்செய்வார்
கந்தூரம் வித்துமே செலவுசெய்து
கர்த்தனைத்தான் துதித்துமே கண்டுகொள்ளே. (40)

கண்டுகொள்ளு பணவிடைதான் தேனிலுண்ணக்
கனிபோலா மண்டலத்திற் காயந்தானும்
பண்பெடும் செவ்வலரிப் பூப்போலாகும்
பதிவாக நரம்பிருகும் பலிதமுண்டாம்
குண்டதுவுஞ் சதைதனிலே நுழைந்திடாது
குணமாகும் நபிமார்கள் தேகமாகும்
விண்டுமுன்னே மலைதனிலே குத்திணுக்கால்
விதமாகத் தவிடுபொடி யாகுந்தானே. (41)

### பூரச்சுண்ணம்

ஆகுமே முன்வைத்த தாளகத்தை
அடவாகக் கல்வமிட்டு உமிநீர்விட்டு
வேகுமே அதைக்குழைத்துப் பூரமேலே
விதமாக மத்தித்துக் கவசங்கட்டி
நாகுமே காடையென்ற புடமும்போட
நலமாக நீறிவிடும் நாட்டிலோர்க்கு
பாகுபெறப் பூரத்தின் நீறுதன்னை
பதிவாக யெடுத்துமே பாகங்கேளே. (42)

### வங்கச்சுண்ணம்.

பாகமாய் வெள்ளீயந் தகடடித்து
பதிவாகப் பூரநீர்தன்னைப் பூசு
யோகமாய்ப் புடம்போடு வங்கம்நீறும்
உத்துயெடு கல்வமிட்டு உறுதிகேளு
தாகமாய் நாகமதைச் சுத்திசெய்து
தாட்டிகமாய் வில்லைதனைச் சாய்த்துநீயும்
மோகமா யதின்மேலே வங்கநீற்றை
மூதிச்சுக் கட்டியே புடமும்போடே (43)

### நாகச்சுண்ணம்

போட்டெடுக்க நாகமது சுண்ணமாகும்
புகலரிய சுண்ணமதை யெடுத்துநீயும்
நாட்டிலே செம்புநூ றொன்றுக்குத்தான்
ஞுடியே ஒன்றுகொடுத் துருக்கிப்பாரு
கூட்டியே மாத்துத்தான் பதினாறுகும்
கூகூகூ நபிமார்போல் கொள்ளைகொள்ளு
மூட்டியே வித்துநீ செலவுசெய்து
முடிவான பள்ளிதனைக் கட்டிவையே. (44)

கட்டிவைத்தால் பலபேர்கள் தொழுதுகொள்வார்
கனிவாகும் நபிமார்கள் பத்திவந்து
குட்டியே உனக்குமே வரங்கள்தந்து
கூட்டியே மக்காவின் தேசத்துக்கு
மூட்டியே கொண்டுபோய் அல்லாவோடே
முடியவே தெரிசனங்கள் காட்டுவார்பார்
நட்டியே மகமதுவைக் காட்டுவார்பார்
நலமான பாகமிது நாடிப்பாரே. (45)

நாடிப்பார் வாதங்கள் வந்துதானல்
நபிமாரை உறுதியாய்த் தொழுதுகொள்ளு
கூடிப்பார் நூலொத்த குராணைத்தானுங்
குணமாகப் படித்தோதக் குணமுமாகும்
வாடியே திரியாமல் தொழுதிரைஞ்சு
மார்க்கத்துக் கழகாகும் வடிவுமாகும்
தோடிபேர் நபிமார்கள் கண்டுபேசக்
குணமாகும் யென்வசனம் கூறுமாமே. (46)

### லிங்கச்சுண்ணம்.

கூறுக நாகநீற் றனையெடுத்து
குணமாகக் கல்வத்தி லிட்டுநீயும்
காறுக உமிநீரைக் குத்திப்பாரு
கருத்தாகக் குளைத்துமே லிங்கத்துக்கு
பாறுக பூசிபுட மிட்டுப்பாரு
பதிவாக லிங்கமது நீறுங்கண்டாய்
தூறுகச் சொல்லாதே லிங்கநீற்றை
துடியாகத் தங்கமதைத் தகடுதட்டே. (47)



### தங்கச்சுண்ணம்.

தட்டியே லிங்கநீர் தனையேபூசி
தாக்கிடவே குக்குடத்தில் தங்கம்நீறும்
முட்டியே தங்கநீர் தனையெடுத்து
முடிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
வட்டியே யிட்டிடவே மாத்துக்கேளு
வடிவாக ஆயிரத்தி யெட்டுமாத்து
கட்டியே திரியாதே யிந்தவித்தை
கனிவாகச் செய்யாதே கண்டுகொள்ளே. (48)

### சாரக்கட்டு.

கண்டுமே லிங்கநீர் தனையெடுத்து
காரணமாய்ச் சாரத்தின் கட்டிமேலே
பண்டுபட அரைத்துமே கவசங்கட்டி
பதிவாகக் குக்குடத்திற் போட்டுவாங்கு
தொண்டுபடும் நவச்சாரம் தங்கம்போலாம்
துடியாக யெடுத்துமே வைத்துக்கொள்ளு
வண்டுபோல் நாகமதை உருக்கிநீயும்
மயமாக யிலுப்பெண்ணை தன்னில்ச்சாயே. (49)

### நாகக்களங்கு.

சாய்க்கவே நாகமது யெண்ணைக்கும்
சரியான நாகமது சேருமொன்று
மாய்க்கவே குகையிலிட்டு உருக்கிநீயும்
மயமாக உருக்குமுகந் தன்னிலேதான்
வாய்க்கவே கட்டினதோர் சாரந்தன்னை
வடிவாக முகந்தனிலே தூவினுக்கால்
ஏய்க்கவே நாகமது கரியிலாடும்
யிதமாகப் புகையாது உறுதிதானே. (50)

உறுதியாய்ப் புகையாது நாகந்தானும்
உத்துமே பலம்நாலு வைத்துருக்கி
அறுதியாய்த் தங்கத்தை யிடையேசேரு
அடவாக உருக்கியே யெடுத்துநீயும்
வறுதியா யுடைத்துமே செம்புயெட்டு
வடிவாக ஒன்றிட்டு உருக்கிப்பார்த்தால்
குறுதிபோல் மாத்தெட்டு காணும்பாரு
குணமாக உப்புகா விக்குந்தானே (51)

காவிக்கித் தானிறங்குந் தங்கந்தானும்
கனிவாக வித்துமே செலவுசெய்து
நாவியாய் நபிமார்கள் வணங்கத்தானும்
நல்லபள்ளி வாசல்தான் கட்டிவைத்து
பாவியாய்ப் போகாமல்த் தொழுதுநீயும்
பதிவாகப் போற்றியே பணிந்துநீயும்
தாவியே அல்லாவைப் போற்றிநீயும்
தடையறவே யாகோபு சாற்றினாரே. (52)

### சாக்குகட்ட செயநீர்.

சாற்றினார் தாளகத்தின் சுண்ணத்தோடே
சரியாக நவச்சாரம் பாதியிட்டு
வாத்தியே அரைத்திட்டுப் பனியில்வைக்க
வடிவாகப் பலபலெனச் செயநீராகும்
பாத்தியாய் சரக்குதனைத் தோச்சுத்தோச்சு
பதிவாக சூட்டுடை தீயில்வாட்டி
ஊத்தியே உருக்கிடவே உருகிநிற்கும்
உத்துப்பார் வெகுதொழில்க ளாடலாமே. (53)

ஆடவே கட்டினதோர் சாக்குதன்னை
அடவாக நவலோகந் தன்னிலீய
கூடவே நவலோக மெல்லாந்தங்கம்
குற்றமறப் புடத்துக்கு யிறங்கும்பாரு
வாடவே வித்துமே செலவுசெய்து
வடிவாகத் தொழுதுமே போற்றிசெய்து
ஊடவே உலகத்தில் சொல்லவேண்டாம்
உற்றுப்பார் வேதைமுகம் அறிவார்பாரே (54)

அறிவார்கள் தானிருந்தால் வாதமாகும்
அசடர்க்குச் சொன்னதினா லாபமில்லை
வறிவாகப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
வாதத்தை வழியோடே மிகவும்பார்த்து
குறிவாகக் கைபாக வினைகளெல்லாம்
கூறியே பார்ப்பார்கள் குணமுள்ளோர்கள்
செறிவாகச் சவுக்காரச் சுண்ணத்தாலே
செகத்திலே சகலமெல்லாம் நீத்திவாழே. (55)



நீத்திடவே சரக்கெல்லாம் நீறிப்போகும்
நிலையான சரக்கெல்லாம் நோய்க்கட்டும்
பார்த்திடவே சகலமெல்லாம் நீத்திப்போடும்
பதிவாகப் பொன்னாகும் பாரிலோர்க்கு
ஏத்திடவே பணமாகும் யில்லாப்போனால்
யிதமில்லை சதமில்லை யிடும்புமாகும்
கூத்திமகன் போலவே அலைவாரிந்தக்
கொடுமைக்கி யென்செய்வோம் கூறினோமே. (56)

கூறினோம் பூலவரிவாய்ச்சடவும் வேண்டாம்
குடிகெடுத்தவாதிகளே சொல்லக்கேளு
பாறிலே பாகமாய்ச் செய்துகொள்ளு
பத்தியே உத்தமரைப் பார்த்துத்தேறி
உளறிலே நூலறிந்து வினையறிந்து
உத்துமே பார்த்திடவே உறுதியுண்டு
நீறிலே சவுக்காரச்சுண்ணம் வைத்து
கோரகப் பிழைப்பதற்குப் பண்ணிடாயே. (57)

பண்ணவே முன்வைத்த தாளகத்தை
பதிவாகநீறெடுத்து வீரங்காலாம்
உண்ணிடவே சத்துஅரை உமிநீர்விட்டு
உறுதிபெற அயத்தகடு தன்னிற்பூசி
நண்ணிடவே குக்குடத்திற் புடமுமிட்டால்
நாடியே தும்பைமலர்போலே நீறும்
அண்ணிடவே நவலோகம் நூத்துக்கொன்று
காரணமாயிட்டுப்பார் கருத்துள்ளோரே. (58)

கருத்துள்ளோர் நினைத்துமே யெடுத்துப்பாரு
கனிவாகத் தங்கமது பத்துமாத்து
உருக்காக யெடுத்துமே வித்துநீயும்
உறுதிபெறச் சவுக்காரம் உண்மைபார்த்து
கருத்தாக வைத்துமே தாளகத்தை
நலமாகவைத்துநீ சரக்கெல்லாந்தான்
பொருத்தவே நீத்திவிடு புலம்பவேண்டாம்
பூவுலகில் ரசவாதம் பேணிப்பாரே. (59

பேணியே செந்தூரங் களங்குடண்ணி
　　பெலமாக நவலோகம் பழுக்கச்செய்து
ஆணியே வித்துமே செலவுசெய்து
　　அடவாகப் பாகமதை அறிந்துகொள்ளு
ஊணியே ஒருவேலைசெய்து நீயும்
　　உறுதியாய் வித்துமே செலவுசெய்து
காணியே கைக்கடங்கப்பண்ணி நீயும்
　　கருதியே திரிந்துநீ வைத்துக்கொள்ளே. (60)

கொள்ளவே நபிமார்கள் சொன்னநீதி
　　குணமாககண்டுமே நூலைக்கண்டு
துள்ளியே திரியாதே நூலைப்பாரு
　　துடியோடு செய்யாமற் கொண்டுநீயும்
புண்ணியமா யருவருப்பைத் தள்ளிநீக்கி
　　புலப்படவே செய்திட்டுப் பொருமையாக
நண்ணியே பார்க்கவே உருவுமாகும்
　　நயமாக யாகோபு நலஞ்சொன்னாரே. (61)

நலமான வழலையைத்தான் முன்னேசெய்து
　　நாடியே துரிசுதனை நீத்திப்பின்பு
பெலமாகத் தாளகத்தை நீத்திநீயும்
　　பிரபலமாய் நவலோகமெல்லாம்நீத்தி
வலமாக ரசங்கட்டி மணியேசெய்து
　　வடிவாகத் தொழுதிறைஞ்சி வடிவங்கண்டு
குலமாகக் குலத்திலே கூடிவாழு
　　கூக்குரலாய் ரசவாதம் யேவலாமே. (62)

ஏவலாய் முன்வைத்த துரிசுச்சுண்ணம்
　　யிடைநேரே வீரத்தை விட்டரைத்து
காவலாய்க் காரீயத் தகட்டிற்பூசி
　　கனமாகப் புடம்போடப் பூப்போல்நீறும்
தாவலே தனையெடுத்து நவலோகத்தில்
　　தடவியே புடம்போடத் தங்கமாகும்
நாவலே தங்கமென்ன நாறுமாத்து
　　நலமாக யாகோபு சொன்னவாரே. (63)



சொன்னதொரு நூல்தனிலே உழைத்துநீயும்
　　சுயமாகச் சவுக்காரச் சுண்ணம்பண்ணி
நன்னயமாய்த் துரிசுதனை நீத்தித்தேர்ந்து
　　நலமானோர் நபிமார்கள் கோடாகோடி
இந்நிலத்தில் நபிகளிடம் சேர்ந்துபோயி
　　யிதமாகப் பாகமதைக் கேட்டுக்கொள்ளு
முன்னமே சொல்லிவிட்டேன் சவுக்காரத்தை
　　முடிவாகப் பாத்தாக்கால் முத்தியாமே. (64)

முத்தியாஞ் சவுக்கார மில்லாச்சுண்ணம்
　　மூலையிலே போட்டிடுநீ முத்திமுத்தி
சித்தியாய்த் துரிசினுட சுண்ணத்தாலே
　　சிறப்பாக ரசங்கட்டும் துடியுமொத்த
சத்தியமாய்த் தாளகத்தை விட்டால்வர்ணம்
　　துடியில்லாத் திடமில்லை சூதுகண்டு
புத்தியாய்க்கண்டுமே பிடித்துக்கொள்ளு
　　புலம்பியே திரியாதே போக்குமாமே. (65)

போக்கான மவுனமாயிருந்துகொண்டு
　　புகலரிய சவுக்காரம் வைத்துத்தேறு
வாக்காகக் கைபாக வரிசையாலே
　　வகைகண்டு துகையாக வளப்பமாக
நீக்காகப் பொருளறிந்து நிலமைபார்த்து
　　நீநிலத்தில் சரக்கைத்தான் மிகவும்நீத்தி
பாக்கியமா யுலகத்திலிருந்து வாழு
　　பத்தியுடன் செய்திடவே முத்திதானே. (66)

முத்தியாய்ச் சவுக்கார வைப்புதன்னை
　　மூவுலகு மெய்க்குமே நபிமார்சொன்ன
புத்தியாய்க் கண்டுமே தேறிநீயும்
　　பிசகாமல் கைபாக வரிசைகண்டு
நித்தியமாய் வைத்துமே செய்துபாரு
　　நீநிலத்தில் வணங்கியே சொல்லைக்கேட்டு
சத்தியமாய்ச் செய்திடவே சித்தியாகும்
　　சரியான பாகமிது செய்துபாரே. (67)

## வங்கச்சேயநீர்.

செய்துபார் காரியம் பலமும்பத்து
செபமாகச்புதுச்சட்டி தன்னிலிட்டு
லைபத்துமே உருக்கியே வெடியையமாட்டு
பத்தியா யுருக்கியது சுண்ணமாகும்
வைத்துமே சுண்ணயிடை துத்தந்தன்னை
வடிவாக யிடைசமனுய்ச் சேத்தரைத்து
கைத்துமே சுண்ணும்புத் தண்ணீராலே
கணக்காக அரைத்து வில்லைகதிரில்வையே. (68)

கதிரிலிட்டுக்காய்ந்தபின்பு உலையிலிட்டு
கணக்காகவூதிடவே கொடியசுண்ணம்
பதியாக யெடுத்துமே சாரஞ்சேர்த்து
பத்தியாய்ப் பீங்கானிற் பனியிலிட்டு
விதிபெறவே நீராகும் நீருதன்னை
நிலையாக யிருத்துமே குப்பிதன்னில்
விதியாக உளத்தியே களஞ்சிவீரம்
விதமாகயிட்டு மெள்ளப் பனியில்வையே. (69)

பனியில்வைக்கப் பலபலெனச் செயநீராகும்
பதிவாக்நீர் தெளியும் பத்திநீரை
கனிவாக யெடுத்துவைத்துப் பின்புதானும்
காரணமாய்த் தாளகத்தை அயச்சட்டியிட்டு
தனியாகச் சுருக்கிட்டுச் சாமம்நாலு
தடையறவே யெடுத்துமே கவசங்கேளு
துனிவாக யிட்டுவங்கத் தனையரைத்து
துடியாகக் கன்னிப்பால் தன்னாலாட்டே. (70)

ஆட்டியே யிருசாமஞ் சென்றபின்பு
அதைவில்லை கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நீட்டியே யிப்படிக்கிப் புடமும்அஞ்சு
நேராக யிட்டுயெடு கொஞ்சந்தானும்
காட்டியே யெடுத்துவைத்துக் கரியினுள்ளே
கனிவாக உருக்கிப்பார் சிவந்துஆடும்
நாட்டிகமா யுடைத்துப்பார் வெட்டையாகும்
சரியாகப் பாகநலம் சரியாய்த்தானே. (71)



சரியாக முன்னியம் போலேநின்று
சல்தியா யுருக்கினால் தாரந்தன்னை
பரியாகச் சத்தில்லா உருகிற்றால்
பதமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
விரிவாகச் சுருக்கிட்ட தாரமேலே
விரும்பியே ஒன்றுக்கு நாலாய்க்கட்டு
குரிபோல மேற்கவசங் கட்டிநீயும்
குணமாகச் சேவலென்ற புடத்தில்வையே. (72)

வைத்துமே யெடுத்துநீ கல்வமிட்டு
வாகாகப் புகைநீரா லரைத்துநீயும்
மூடித்துமே தாளகத்தின் மேலேகட்டு
முனிவாகக் கதிரில்வைத்துக் காயப்போடு
இத்துமே குக்குடத்தில் போட்டெத்திரு
திரமையாய்க் கல்வமிட்டுப் பின்புநீயும்
நத்தியே புகைநீரை விட்டுஆட்டி
நலமாகத் தாளகத்தின் மேலேகட்டே. (73)

கட்டியே யிப்படிக்கித் திரமும்அஞ்சு
கனிவாக புடமிட்டு யெடுத்துப்பாரு
மூட்டியே கருஞ்சிவப்பு மாகும்பாரு
முனிவாகச் செம்புதனி லிடையேதாக்கு
குட்டியேதாக்கோடு கட்டிளைப்போல்
குணமாக யிருக்குமது தாளகந்தான்
பட்டியே நவலோகந் தன்னிலீய
பதிவாக கொறுக்குமது பண்புமாமே. (74)

பண்பாக ஞெறுங்கியதோர் லோகத்தூடே
பாச்சியிடு தங்கமதைப் பரிவாய்த்தானும்
உண்பாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
உறுதிபெற யிருசாமம் அரைத்துகல்லாய்
நண்பாக உமிநெருப்பில் வருத்துப்போடு
நலமாகக் காசியென்ற மேருக்கேத்தி
வண்பாகப் பனிரெண்டு சாமந்தீதான்
வடிவாக யெரித்திடவே வர்ணமாமே. (75)

வர்ணமா முருக்கம்பூப் போலேவர்ணம்
    வடிவாக வெடுத்துமே வகையைக்கேளு
தறணமாய் தங்கமென்ற சிமிளில்வைத்து
    தடையறவே நவலோகம் நூற்றுக்கொன்று
கறண்மா யிட்டிடவே மாத்துப்பத்து
    கனிந்துமே மகமறுவைத் தொழுதுபோற்றி
பறணமாய் விந்துமே செலவுசெய்து
    பதிவான காயத்தை யிருத்திடாயே. (76)

நிறுத்திடவே பணவிடைதான் மண்டலத்தில்
    நினைவாக உண்டுவரக் காயந்தானும்
பறுத்திடவே சடமிருகிக் காயசித்தி
    பதிவாகச் செவ்வலரிப் பூப்போலாகும்
வறுத்துமே நோய் தவிடுபொடிகளாகும்
    வடிவாகச் செவ்வலரிப் பூப்போற்கண்கள்
நறுத்துமே யிருந்துவிடும் விந்துயேறும்
    நலமான வாகியாம் நாட்டிலோர்க்கே. (77)

நாட்டிலே வங்கத்தை முன்னூர்தன்னில்
    நலமாகச் சொல்லிவிட்டேன் றெண்டுமொத்து
கூட்டியே கழித்துமே பின்புநீயும்
    குணமாகச் சரக்குகளை குறித்துப்பார்த்து
தாட்டிகமாச் செய்துவிடத் தங்கமாகும்
    தனியாகச் செய்தாக்கால் பலனுமில்லை
வட்டிலே யெழுதினது பொய்யென்பார்கள்
    யிதமாக யாகோபு சொன்னவாறே. (78)

சொன்னதொரு நூல்பார்த்து வாதமார்க்கம்
    சோதித்தால் பலனுதுஞ் செய்துபாரு
கன்னல்போல் ருசியாகப் பாத்துத்தேற
    கனிவாகப் பிலனைக் கண்டுகொள்ளு
தன்னிலே திரியாதே சொன்னேனப்பா
    தடையாகா கைபாக வரிசைகண்டு
முன்னமே சொல்லிவிட்ட நூலைப்பார்த்து
    முடிவாகச் செய்தாக்கால் முத்தியாமே. (79)



முத்தியாம் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
    முடிவாக அறுநூறுஞ் சோதித்தேதான்
புத்தியாய் சோதித்து முன்னூர்பாத்து
    புலன்படவே யிந்தநூல் நூத்தன்பத்தஞ்சு
சத்தியமாய்ப் பார்த்துமே செய்தாயானால்
    தவமாகும் வாதம்வருந் தடையேயில்லை
சித்திபெற யாகோபு சொன்னநீதி
    சிரியோர்கள் செய்துமே பிழைக்கான்றே. (80)

பிழைக்கவே ரசவாதிக்காகச் சொன்னேன்
    பேருலகில் பிரளாமல் செய்துபாரு
உழைக்கவே உழுதாக்கால் பலனுமாகும்
    உறுதியா யுழையாத வாதிதானும்
களைக்கவே யிருந்துண்டு சுத்திச்சுத்தி
    கனிவாகப் பொய்கள்தான் சொல்வான்பாரு
தழைத்தமரம் போலவே யிருக்கவே ஞாய
    தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. (81)

சொன்னதொரு யென்னூலில் யெல்லாமெய்யாம்
    சொற்பெரிய நபிமார்களாடும் ஆட்டு
கன்னல்போல் கரும்புருசி போலச்சொன்னேன்
    காரணமாய் நபிமார்கள் என்மேல்க்கோபம்
இன்னிலத்தில் யெல்லாருங் கோபமாச்சு
    யிருந்திடத்தி லிருந்துமே வேலைசெய்து
தன்னிகரில் சித்தியே பெரலாமென்று
    தாட்டிகமா யாகோபுதான் சொன்னாரே. (82)

சொன்னதொரு சுண்ணங்கள் பொய்யேயென்றால்
    சொற்பெரிய வேதமெல்லாம் பொய்யேயாகும்
கன்னல்போல் வேதமெல்லாம் நிசமதாகும்
    கனிவாக வாதம்பொய் யென்றபேர்க்கு
கன்னயமாய்வர் வாயில்மண் தான்போட்டு
    நலமாக பள்ளிதனில் சமாதுவைப்பார்
இன்னிலத்தி லவர்பேச்சே வேண்டாமென்று
    யிருந்துரைத்தார் யாகோபு யிதமதாமே. (83)

இதமாக நிலைத்ததொரு வாதிதானும்
    யின்பனண்மை யில்லாது பொய்கள்சொல்லார்
பதமாகச் செய்திடுவா ருலகத்திற்றான்
    பத்தியாய்க் குருமுடிக்குங் காலங்காண்பார்
நிதமாக அனுசரிப்பார் நேர்மையாக
    நிலைதப்பார் தப்பினு லின்னமொன்று
விதமாகச் செய்வார்கள் நிலைத்தவாதி
    வித்தகராம் யாகோபு விளம்பினேனே. (84)

### கல்ச்சுண்ணச் சவுக்காரம்.

விளங்கியதோ ரின்னமொரு சுண்ணங்கேளு
    விதமாக வெகுசுருக்கு முன்னேபாரு
களங்கியே வெள்ளைக்கல் தனையெடுத்து
    நலமாகப் பச்சையாய்க் கல்லைத்தானும்
வுளங்கியே ஆயிரங்கல் லெடுத்துநீயும்
    உவர்மண்ணு சுண்ணும்பு நேராய்க்கூட்டி
துளங்கியே பாணிப்டி யெட்டூற்றி
    துடியாகக் குமுறவே யெரித்திடாயே. (85)

எரித்திடவே வெள்ளைக்கல் கட்டிப்போகும்
    பிதமாகக் காளவாய் தன்னிலிட்டு
விரித்திடவே நீத்தியதைப் பாணிகேளு
    விதமாக ஒன்றுக்கு நாலுதண்ணீர்
முரித்திடவே விட்டுஅதை மண்டலந்தான்
    முட்டியா யிட்டுவைக்க உப்புத்தானும்
குரித்திடவே உப்பாகும் உப்பெடுத்து
    குலமாக வைத்துமே சொல்லக்கேளே. (86)

சொல்லவே படையனைத்தான் கரியிலிட்டு
    சுகம்பெறவே ஊதிவிடக் கடுஞ்சுண்ணமாகும்
மெல்லவே ஊதினதோர் துத்தச்சுண்ணம்
    மேன்மையாய்ப் பலம்நாலு கல்வத்திட்டு
நல்லதொரு கற்சுண்ணத் துப்புதன்னை
    நாடியதோ ரிடைக்கிடைதான் சேத்தரைத்து
பல்லதொரு சுண்ணநீர் விட்டரைத்து
    பதிவாக வில்லைகட்டிக் கதிரில்வையே. (87)



கதிர்தனில் வைத்துமே காய்ந்தபின்பு
    கனிவாக அஞ்சுசுண்ணங் குகையில்வைத்து
நிதிபெறவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
    நிலையாகச் சவுக்கார சுண்ணமாச்சு
விதியாகத் துரிசதுதான் உடனேநீறும்
    விதமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
கெதிவேறு யில்லாமல் வாதமார்க்கம்
    கேட்டவுடனே தெண்டனிடும் கிருபையாமே. (88)

கிருபையாய் முன்வைத்த சவுக்காரத்தை
    கெறுப்மா யெடுத்துமே நாலத்தொன்று
தறுபமாய் வீரமது சேர்த்துநீயும்
    தடையறவே அரைத்துமே துருசுக்கப்பி
உறுமையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
    கனமாகத் துருசதுவுஞ் சுண்ணமாச்சு
உறுவமாய்ச் சரக்கெல்லாங் கெஞ்சியாடும்
    உத்தமனே வெகுபோக்கு உறுதிதானே. (89)

உறுதியாய் நீறினதோர் துருசுச்சுண்ணம்
    உத்துமே பலம்நாலு யெடுத்துக்கொண்டு
குறுதியாம் வீரமது பலமுமொன்று
    குணமாக றெண்டுமொன்று யரைத்துத்தானும்
பறுதியாய் மனோசிலையின் மேலேகட்டு
    பதிவாகக் கதிரில்வைத்துப் பின்புதானும்
முறுதியாய்க் குக்குடத்தில் புடத்தைப்போட்டு
    முத்துமே மனோசிலையுஞ் சுண்ணமாமே. (90)

சுண்ணமா மனோசிலையின் சுண்ணத்தோடே
    சுகமாக ஆட்டியரை நாலுக்கொன்று
வன்னமா யரைத்துமே வாய்நீராலே
    மத்தித்துத் தங்கமென்ற தகட்டிற்பூசு
நன்னயமாங் குக்குடமாய்ப் புடத்தைப்போடு
    நாட்டியே தங்கமது நீறிப்போகும்
கன்னல்போல் வலோகந் தன்னிலீய
    காரியமாய்ப் பார்த்திடவே கணக்குமாமே. (91)

கணக்காக நவலோக மெல்லாந்தானும்
காரணமாய்ப் பழுக்குமே கருத்துள்ளோர்க்கு
தணக்கமாய் மனோசிலையின் சுண்ணம்போல
தனியாக வேலையில்லை தரணியோர்க்கு
குணக்காகச் சொல்லாதே புடமிரங்கும்
குறியாக மனோசிலையின் குறிப்புமெத்த
துணக்காக மனோசிலையின் சுண்ணந்தோடே
துடியாக வீரமது ஒன்றுகூட்டே. (92)

கூட்டியே வாய்நீரா லரைத்துநீயும்
குடியாகச் செம்பென்ற தகட்டில்பூசி
நாட்டியே குக்குடமாய்ப் போட்டுவாங்கு
நலமாகத் தாம்பூரஞ் சுண்ணமாகும்.
பாட்டியே தாம்பூர சுண்ணந்தன்னை
பதிலாக கதலிதான் பழத்திற்கொஞ்சம்
தூட்டியே களஞ்சியிட்டுச் சாமம்வைக்க
துடியாகக் காய்போலே துணையுமாமே. (93)

துணையாகத் தாம்பூர பற்பந்தன்னை
துடியாக விராலியிலை தன்னிலீய
அணையாக விராலியிலை தண்ணீராகும்
அடவாகச் சாறுதனைச் சீஷா தன்னில்
வணையாக அடைத்துமே பின்புநீயும்
வடிவாகச் சூதமது சேருயிட்டு
மணையாக அயக்கரண்டி தன்னிலிட்டு
வாகாக அடுப்பதனிற் காயவையே. (94)

காயவைத்து யெடுத்துப்பார் சூதந்தானும்
கடிந்துமே யிட்டிலிபோல் கட்டிப்போகும்.
மாயவே யெடுத்துமே உண்டைபண்ணி
மயமாக யெலுமிச்சம் பழத்துள்வைத்து
நாயமார் சொன்னபடி புடைத்தைப்போடு
நலமாக யிப்படிக்கிப் புடமுங்கேளு
ஏயவே யிருபத்தி ஒன்றுபோட்டு
யெழிதாக யெடுத்துமே சொல்லக்கேளே. (95)



சொல்லவே கரியில்வைத்துச் சூதந்தன்னை
சுகமாக உருக்கிப்பார் சூதந்தானும்
கல்லவே கரியில்நின்று ஆடுமாடும்
கணக்காக ஆடினதோர் சூதந்தன்னை
மெல்லவே பலம்காலு வைத்துருக்கி
விருப்பமாய்த் தங்கமொன்று நாகம்ஒன்று
கொல்லவே உருக்கிடவே களங்கமாகும்
கூட்டியிடை நவலோகம் நாற்றுக்கொன்றே. (96)

ஒன்றாக யிட்டுமே உருக்கிப்பாரு
ஓகோகோ மாத்தென்ன பத்துமாகும்
நன்றான மலைதனில்சஞ் சரிக்கலாகும்
நடையறவே சூதமுண்ட பேர்க்குத்தானும்
அன்றான செவ்வலரி போலாந்தேகம்
கனிவாகப் பாகமாய்ச் செய்துதேற
நன்றாகப் பாகம்வந்தால் பலனுமாகும்
நாடியே யசோபு நலஞ்சொன்னாரே. (97)

சொன்னதொரு மனோசிலையின் சுண்ணந்தன்னை
சுகமாகக் களஞ்சிநால் தனைநிறுத்து
பன்னகமாம் பித்தளையின் தகடுதன்னில்
பதிவாகக் கட்டியே புடமுமிட்டால்
நன்னயமாய் வெண்ணீறாய் நீறிப்போகும்
நலமாக நவலோகந் தன்னிலீய
கன்னல்போல் மாத்தென்ன பத்துமாகும்
கடிதாகப் புடமிறங்கும் கண்டுகொள்ளே. (98)

கண்டுகொள்ளு யிதைவித்துச் செலவுசெய்து
கனிவாகப் பள்ளிதனில் போய்த்தொழுது
தொண்டுபடு வேதத்தைப் படித்துத்தேறு
துப்பரவாய் அல்லாவுந் துணையேசெய்வார்
பண்டுமே மனோசிலையின் சுண்ணத்தாலே
பாக்கியங்க ளுண்டாகும் பதிவுமெத்த
முண்டுமே செய்யாமற் செய்துகொள்ள
முக்கியமா யாகோபு மொழிந்தவாரே. (99)

மொழிந்திடவே மனோசிலையின் சுண்ணந்தன்னை
முனையான வாய்நீரால் மத்தித்தேதான்
வழிந்திடவே துரிசின்மேல் கட்டிநீயும்
வடிவாகக் குக்குடத்தின் புடத்தைப்போடு
கழிந்திடவே வெண்ணீராய்ப் பொறுமிப்போகும்
நாதாந்த சாரமுடன் பெழிநிலாகும்
கழிந்திடவே துரிசதுவுஞ் சுண்ணமானால்
சாடாகும் வாதமெல்லாங் கண்டுகொள்ளே. (100)

கண்டுமே துருசதுவின் சுண்ணத்தாலே
கனமான சூதத்தைக் கறண்டியிட்டு
பண்டுமே துருசதுவை விழுலிக்கிட்டு
பதிவாக நீர்முறித்து நீரைவிட்டு
முண்டுமே கொதியிடவே கட்டிப்போகும்
முடிவாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
வண்டுபோ லுருக்கியது ஆடும்நேர்மை
வடிவாக வெள்ளிபொன்போ லாடலாமே. (101)

ஆடுகின்ற சூதமது பழுமம்நாலு
அடவாகத் தங்கமொன்று நாகமொன்று
கூடுகின்ற குகையில்வைத்து உருக்கிப்பாரு
குணமாக யெல்லாமுங் களங்கமாகும
நாடுமே யிதைஉடைத்து நவலோகத்தில்
காட்டிடவே றூத்துக்கு ஒன்றுதாக்க
பாடுமுன்னே தங்கமது உடனேயாகும்
பத்தியாய் உப்புக்குங் காவிதானே. (102

காவிக்கி உடனேதான் தங்கந்தானும்
கனிவாகப் புடமிறங்குங் கருத்துள்ளோர்க்கு
பாவிக்கிக் கிட்டாது வாதமார்க்கம்
பதிவாக நல்லோர்க்குக் கிட்டுங்கிட்டும்
தாவிக்கிக் கிட்டினால் தர்மம்பண்ணு
தடையறவே ஞானத்தை மிகவேபாரு
கோவிக்குங் கைகண்ட வித்தைபோல
குணமாகு மணமாகுங் குறக்குமாமே. (103



குறக்காகத் துரிசனுட சுண்ணம்வைத்து
குணமாகச் செய்தாக்கால் குறிப்புமாகும்
பறக்காகச் சவுக்காரச் சுண்ணமில்லா
பதிவாகத் துரிசதுதான் நீறமாட்டா
நறுக்காகச் சூதமது கட்டமாட்டா
நலமாகக் கட்டியே வேலைசெய்தால்
மறுக்காக யெல்லாமுஞ் சித்தியாகும்
மூதுணர்ந்து பார்த்தாக்கால் யெல்லாமாமே. (104)

எல்லாமு மாகவே சவுக்காரத்தை
யிதமாக வைத்துமே வேலைசெய்தால்
பொல்லாமை வாராது துருசுநீறும்
போக்கோடே கருவிதுதான் புகலக்கேளு
நில்லாமல் தாளகத்தை நீத்திக்கொள்ளு
நானிலத்தில் நவலோக மெல்லாம்யேமம்
கல்லாத மனிதரிடஞ் சேரவேண்டாம்
கண்டுமே யாகோபு சொன்னவாறே. (105)

வாறேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வகையான சவுக்காரத்தாலே யாச்சு
கூறேது கருவாச்சு கோடிவேதை
குணங்கெட்டுத் திரியாதே கொள்கியாடு
பார்தனிலே சித்தரெல்லாஞ் சவுக்காரத்தை
பாடியே மறைத்துவிட்ட பரிசுதன்னை
வீறேது உங்களுக்குச் சொல்லிவிட்டேன்
விதமான சவுக்கார மேவிடாயே. (106)

வெடியுப்புச்சுண்ணம்.

மேவியே வெடியுப்பு சுண்ணந்தன்னை
மேதினியோர் மெய்க்கவே சொல்லக்கேளு
காவியமாய் வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
கனிவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
ஓவியமாய்க் கல்லுரலில் போட்டுநீயும்
உத்துமே சீனமது பலமும்பத்து
தாவியே யெலுமிச்சம்பழம் பிழிந்து
தள்ளியே சக்கையது பலமும்அஞ்சே. (107)

அஞ்சோடு யிதுமூன்றும் உரலிலிட்டு
ஆதியா யுலக்கையினு லிடித்துநைய
பிஞ்சோடு மெழுகுப்தமா யெடுத்து
பேசாமல் புதுச்சட்டி அடுப்பிலிட்டு
கெஞ்சவே லில்லைபண்ணி அதனிலிட்டு
கெடியாகத் தீப்போடு நாலுச்சாமம்
மிஞ்சவே சங்குபோல் வெளுத்திருக்கும்
மீறுமல்ச் சொல்லுகிற பாகங்கேளே. (108)

பாகமாய்க் கொஞ்சமெடு மஞ்சள் தன்னில்
பதிவாக யிட்டுப்பார் உண்ணிரெத்தம்
யோகமாய்ச் சிவந்தாக்கால்ப் பாகமாகும்
உறுதிபெறச் சிவக்காட்டால் திரும்பத்தாலும்
மோகமா யெரித்திடவே சுண்ணமாகும்
முடிவான வெடியுப்புச் சுண்ணமாச்சு
தாகமாயெடுத்து வைத்துப் பின்புநீயும்
தடையறவே யின்னமொன்று சாத்துவேனே. (109)

ரசபதங்கம்.

சாத்துவேன் ரசபதங்கஞ் சொல்லக்கேளு
சரியாகச் சூதமது சேருஒன்று
போத்தவே கல்லுப்பு படியும்நாலு
புகலரிய செங்கல்மா ரெண்டுமாகும்
ஏத்தவே யிதுரெண்டு மிடித்துச்சட்டி
யிதமாக அடிகனத்த சட்டிதன்னில்
காத்திசையு மெய்க்கவே அமுக்கிநீயும்
நலமாக நடுவிலே பள்ளம்பண்ணே. (110)

பள்ளமாய்ப் பண்ணியே சூதமிட்டு
பதிவாக மேற்சட்டி மூடிநீயும்
துள்ளாமல் யேழுசீலை மண்ணுஞ்செய்து
துப்பறவா யடுப்பேத்தி யெரிக்கக்கேளு
விள்ளாதே ஒருவருக்குந் தீபமாகும்
விதமாகக் காடாக் கினியாயெரித்து
தளாதேள் பனிரெண்டு சாமந்தீதான்
தாட்டிகமா யெரித்தாத்து தருணமாமே. (111)

ஆத்தியே சட்டிதனைத் திரந்துபாரு
அமர்ந்துமே உயரஅது யேறித்தானும்
கூத்திபோல் தும்பைமலர் போலிருக்கும்
குணமான பற்பமிது காரம்ரெம்ப
சாத்தியே மயிற்குச்சியால் வழித்து
தடையறவே செருென்று நிறுத்துநீயும்
பாத்திபனூர் மெய்க்கவே கல்வத்திட்டு
பதிவாக யின்னமொன்று பகரக்கேளே. (112)

பகரவே முன்வைத்த வெடியுப்புச்சுண்ணம்
பதிவான ரசபதங்க மிடையேசேர்த்து
நகரவே பழச்சாற்றால் சாமமாட்டி
நலமாகச் சூடனைத்தான் கொளுத்திவிட்டு
உகரவே வில்லைதனை வாட்டிநீயும்
உத்துமே யெடுத்திடுநீ கல்வமிட்டு
தகரவே சாரம்து யிடையேசேர்த்து
தாட்டிகமாய் ரவிதனிலே வைத்திடாயே. (113)

வைத்திடவே பலபலெனச் செயநீராகும்
வாகான யின்னீரில் வீரமிட்டு
கைத்திடவே சீஷாவி லடைத்துநீயும்
கனமான நபிமாரைத் தொழுதுபோற்றி
எத்திசையு மெய்க்கவே தொழுதுநீயும்
எனையாண்ட அல்லாவை யிறுதயத்தில்
முத்திபெறத் தொழுதுமே யிருந்தபின்பு
மூவுலகுக் கரசானி முயற்சிகேளே. (114)

முயற்சியாய் வெடியுப்புச் செயநீராலே
மூவுலக மெய்க்கவே கல்லுப்புத்தான்
அயர்ச்சியாய்த் தெரிப்படங்கிக் கட்டிப்போகும்
அறிவான துருசியது சுண்ணமாகும்
நயற்சியாய்க் காரமுதல் கட்டிப்போகும்
நவச்சாரங் கட்டியே த[illegible]மாகும்
தயற்சியா யின்னீரிற் பாஷாணந்தான்
துடியான சுண்ணமாந் தோய[illegible]

28115

### துருசுச்சுண்ணம.

தோய்ந்துமே செயநீரைப் பிங்கானிட்டு
துடியான துருசியது பலமும்நாலு
ஆய்ந்துமே வெடியுப்புச் செயநீர் தன்னில்
அன்பாகத் தோய்த்துமே பச்சம்போடு
காய்ந்துமே கதிரவன்முன் போட்டுவாநீ
கடிதான பசப்பத்து வெள்ளையாகும்
காய்ந்துமே முன்வைத்த சவுக்காரத்தை
நலமாக மேல்கட்டிப் புடத்தைப்போடே. (116)

போடவே துருசதுவுஞ் சுண்ணமாகும்
புகலறிய சுண்ணத்தால் வேதைகோடி
ஆடவே அண்டரண்டந் துளைத்தாடும்
ஆதியாம் வெடியுப்புச் செயநீராலே
கூடவே பொன்பிறந்து துருசியாலே
குணமான தாளகத்தால் பொன்னுறெம்ப
நாடவே சகலமுந்தான் சித்தியாகும்
நாதாந்த சாரமெல்லாம் நொடிக்குள்ளாச்சே. (117)

ஆச்சப்பா துருசுதான் சுண்ணமானால்
அண்டரண்ட பேரண்டம் கொடிக்குள்ளாச்
நீச்சப்பா வெகுநீச்சு யென்றுசொல்லி
நிலையில்லா தென்றுமே சொல்லவேண்டாம்
காச்சினதோர் பால்போலே ருசிக்குங்கண்டாய்
கண்கொள்ளா வேதையரங் கண்டுகொள்ளு
பாச்சப்பா வெகுசனுக்கு பரிவாஞ்சுண்ணம்
பத்தியுடன் செய்தவர்க்கு முத்திதானே. (118)

### தாளகச்சுண்ணம்.

முத்தியாந் தாளகமும் பலமும்பத்து
முனிவான சுண்ணம்பு நீரில்சுத்தி
நித்தியமாய் அயச்சட்டிக் குள்ளேயிட்டு
நிலையாக வெடிநீரைச் சுருக்குப்போடு
சத்தியமா யிருசாமஞ் சுருக்குப்போட்டு
சரியான முன்துருசுச் சுண்ணந்தன்னை
புத்தியாய்க் கட்டியே புடமுமிட்டால்
பதிவாகத் தாளகந்தா னீறுமாமே. (119



நீறான தாளகத்தைக் கல்வத்திட்டு
நிலையாகத் துருசியொரு பலத்தின்மேலே
காறான கவசமது கட்டிநீயும்
கனமில்லா தெருவெக்கிப் புடமுமிட்டால்
வாறான கொக்கதுபோல் நீறிப்போகும்
வடிவான துறுசதுவு நீறுதன்னை
தாறான நவலோகம் நாத்துக்கொன்று
தாட்டிகமா யிட்டிடவே யேமமாமே. (120)

ஏமமாந் தாளகத்தை நீத்திறைக்கால்
எளிதிலே தங்கமாம் யின்பமுண்டு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டு
கைப்போடு புளியுப்பு யெண்ணைவிட்டு
தாமமாம் பணிவிடைதா னுண்டுவாநீ
தாக்கிடவே மேனியது தங்கமாகும்
வாமத்தை புணாதே யென்றுசொல்லி
வகையான யாகோபு வழுத்தினாரே. (121)

### பாஷாணச் சுண்ணம்.

வழுத்தவே வெள்ளிவித்தை யொன்றுகேளு
வாகாக வெள்ளையென்ற பாஷாணந்தான்
அழுத்தவே வெள்ளாவி தன்னிற்றானும்
அடவாகச் சுத்திசெய்து யெடுத்துநீயும்
பழுத்தவே அயச்சட்டிக் குள்ளேயிட்டு
பண்பாக வெடியுப்புச் சுருக்குச்சாமம்
தழுத்தவே போட்டுமே யெடுத்துநீயும்
தன்மையா யதின்மேலே கவசங்கேளே. (122)

கவசமென்ன துருசுனுட சுண்ணத்தாலே
கனிவாகக் கவசமிட்டுக் கட்டிநீயும்
துவசமாய்க் குக்குடமாய்ப் போட்டுவாங்க
துடியாக வெள்ளைப் பாசாணந்தானும்
தவசமாய் நீறியது சுண்ணமாகும்
தடையில்லாச் சுண்ணமது ஆச்சுதென்றால்
குவசமாய் வெள்ளீயம் நீரைவாங்கும்
கூக்குரலாம் வெள்ளியது கொள்ளையாமே. (123)

கொள்ளையாம் வெள்ளியம் நூற்றுக்கொன்று
　　கொடுத்திடுவா யுருக்குமுகந் தன்னிற்தானும்
பள்ளையாம் வெள்ளியது ஆகும்பாரு
　　பதிவாக வங்கமது கொடுத்துவது
தள்ளையாம் சுயவெள்ளி யாகும்பாரு
　　தனையெடுத்து வித்துமே செலவுசெய்து
துள்ளையா யுண்டுடுத்தித் தொழிலைப்பாரு
　　துடியான பாகமிது தோய்ந்துபாரே. (124)

தோய்ந்துபார் வெள்ளைப் பாஷாணநீற்றை
　　துடியாக மத்திச்சுத் துருசுக்கப்ப
வாய்ந்துபார் கதிரில்வைத்துக் காயப்போடு
　　வடிவாகக் குக்குடத்தில் சுண்ணமாகும்
நாய்ந்துபார் துருசுனுட சுண்ணந்தன்னை
　　நலமாகப் பித்தளையில் நூற்றுக்கொன்று
பாய்ந்துமே கொடுத்திடவே வெள்ளிதானும்
　　பதினறு மாத்தாகும் பண்புமாமே. (125)

பண்பாகத் துரிசினுட நீறுதன்னை
　　பதிவாக யிரும்புதனைத் தகடடித்து
உண்பாக மேல்தடவிப் புடமுமிட்டால்
　　உறுதிபெற வெள்ளியாம் உத்துப்பாரு
தண்மையாம் நவலோக மெல்லாம்வெள்ளி
　　சரியான பாகமிது கண்டுகொள்ளு
வண்மையா யிந்தவெள்ளி வித்துநீயும்
　　வடிவான பள்ளிதனைக் கட்டிவையே. (126)

கட்டிவைத்து உள்ளேநீ சென்றுபுக்கு
　　கனிவாக மேல்நோக்கி அல்லாவைத்தான்
துட்டியாய்த் தொழுதிறைஞ்சிப் போற்றிசெய்து
　　துடியாக மனதுள்ளே புக்கிச்சென்று
குட்டிபோ லிரையாதே மகம்மதுவை
　　குணமாகத் தொழுதிறைஞ்சு குணமதாக
நட்டியே திரியாதே யிதப்பதாக
　　நலமாகப் பின்னுமே நாட்டங்காணே. (127)



காணவே கைபாகந் தப்பிற்றனல்
　　கனிவாகத் தங்கமில்லை கண்டுகொள்ளு
வாணமே சுருக்காலே சரக்குச்சாகும்
　　வடிவான சுண்ணமதைக் கவசங்கட்ட
தோணவே சவுக்காரத்தாலே யாச்சு
　　துடியான தானகத்தா லெல்லாமாச்சு
வேணபடி செய்யாம லுண்மையாக
　　விருப்பமாய்ச் சகலமுந்தான் சித்தியாமே. (128)

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
　　சிறப்பான சவுக்கார சுண்ணத்தாலே
முத்தியாய் வெடியுப்பு சுண்ணத்தாலே
　　முனிவான சகலசரக் கதனைக்கட்டும்
பத்தியாய்ச் சுண்ணத்தைப் பண்ணிநீயும்
　　பதிவாக நவலோகங் குடுத்துத்தீரு
நித்தியமாய் நவலோகம் பழுக்கும்பாரு
　　நீணிலத்தில் யாகோபு சொன்னவாறே. (129)

சொன்னதொரு யிக்காண்டந் தன்னிற்தானும்
　　சுருதிபெற தூத்தன்பத் தஞ்சுதன்னில்
நன்னயமாய்ச் சவுக்காரம் வைத்துநீயும்
　　நலமாகக் கருவாகச் சொன்னேன்பாரு
இன்னிலத்திற் கருவாக வெண்ணிப்பாரு
　　யிதமாகச் சகலமெல்லாஞ் சித்தியாகும்
தன்னிதரில் கைபாக வரிசைகண்டு
　　தாக்கிடவே யெல்லாமு நன்மையாமே. (130)

கல்லுப்புக்கட்டு.

நன்மையாய்க் கல்லுப்புக் கட்டுக்கேளு
　　நலமாகக் கல்லுப்பு மணியாய்வாங்கி
உண்மையாய்ச் சீவியெடு விளாங்காய்போலே
　　உறுதியாச் சீவியே பின்புநீயும்
தன்மைபெற வெடியுப்புச் செயநீர்தன்னில்
　　தாட்டிகமாய்ப் பச்சமொன்று வைத்துப்போடு
வண்மையாய்க் கதிர்தனிலே காயவைத்து
　　வடிவாக மேல்கவசம் வண்மைகேளே. (131)

வண்மையாய் முன்வைத்த சவுக்காரத்தை
வளமாகக் கட்டியே கதிரில்வைத்து
உண்மையாய்க் குக்குடத்திற் புடத்தைப்போடு
உறுதிபெறக் கலசத்தைப் பிரித்துநீயும்
தண்மைபெறக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
தடையறவே கரியில்நின்று பொன்போலாடும்
கண்மையா யாடாதபோதைப்பின்பு
கனிவாக முன்போலே துவைந்துப்போடே. (132)

போட்டுமே சவுக்காரங் கவசங்கட்டி
போக்கோடே முன்போலே புடத்தைப்போடு
காட்டுமே யெடுத்துப்பார் தங்கம்போலாம்
நலமாகக் கரியில் நின்றாடும்பாரு
பூட்டுமே யிதுபூட்டுச் சொன்னேன்பாரு
புகலரிய தைபாக வரிசையாலே
காட்டுமே காணுமி யெல்லாந்தானும்
கரியில்வைத்த கல்லுப்பு மணிபோலாமே. (133)

மணியான உப்புநின்று உருகும்போது
மாட்டுமே நாலுக்கு ஒன்றுதங்கம்
தணியான தங்கமது ஒன்றுபோடு
தாக்குகின்ற தங்கயிடை ஈரகம்போடு
பணியாக உருக்கிடவே யெல்லாஞ்சேர்ந்து
பதிவாகக் களங்காகும் யெடுத்துவைத்து
கனியாகவபி மாரைத்து நியேசெய்து
நாடியே பின்புதான் காட்டங்கேளே (134)

காட்டமாய் கவ்லோகம் நாற்றுக்கொன்று
காடியே யிட்டிடவே மாத்துப்பத்தாம்
கூட்டமாய்ப் புட்த்துக்குங் காவிக்குந்தான்
குணமாக யிறங்கிவிடுங் கூர்மைமெத்த
தாட்டமா யிதைவித்து செலவுசெய்து
துணையாகச் சோறுக்கி யெல்லார்க்குந்தான்
மூட்டவே குடித்தவிடு பின்புநீயும்
முனிவாக அதன்பின்னே சொல்லக்கேளே. (135)



## செந்தூரம்.

சொல்லவே களங்கதுவும் பலமும்நாலு
தடியான கல்வமிட்டுத் தொக்கவேதான்
மெல்லவே வெடியுப்புச் செயநீர்விட்டு
விதமாகச் சாமம்ரெண்டு விரசாயாட்டி
கல்லவே உமிநெருப்பில் வறுத்துநீயும்
கனிவாகக் காசியென்ற மேருக்கிட்டு
வல்லமையா யெரித்திடவே முருக்கம்பூப்போல்
வடிவாகச் சிவப்பாகும் வாதமாமே. (136)

வாதமாம் நவலோகந் தன்னிலீய
வடிவான மாத்தென்ன பதினாறாகும்
தமைப்பு பணவிடைதான் தேனிலுண்ண
நிலையாத காயமிது காயசித்தி
பேதமில்லா ரேவெல்லாந் தவிடுமாகும்
பிரபலமா யாகோபு சொன்னநீதி
சாதகமா யிம்மொழிகள் நிசமதாகும்
சரியான பாகமிது சார்ந்துபாரே. (137)

சார்ந்துபார் உப்பைவிட்டு வாதம்பார்த்தால்
சரியான வாதமில்லை தயங்குவார்கள்
பார்ந்து பார்கூட்டுமே தவிப்பாரப்பா
பகரரிய வெடியுப்புச் சுண்ணமில்லை
தார்ந்துமே சாக்கடையி லெநியலாகும்
தவித்துமே திரிந்தலைவார் சவங்கல்வாதி
உணர்ந்துமே நடப்பார்க ளொன்றுங்காணார்
உணுத்தரசு வாதிகா ளுண்மைதானே. (138)

தானென்ற நூல்தனிலே வெடியுப்பைத்தான்
தடைபடவே சொன்னார்கள் உலுத்தரப்பா
னென்ற வாதிமார் செய்துபார்த்து
உப்புத்தா னின்னதென்று அறியாமற்றான்
தானென்ற புளியரியார் மலத்தைத்தானே
கடுமையா யெடுத்துமே சுண்ணஞ்செய்து
னென்று கருத்துமே யெரிவாரப்பா
உத்துணர்ந்து பாருதார் உறுதிதானே. (139)

உறுதிதா னறியாமல் உலுத்தமாண்பர்
ஒருகோடி வேதைகளும் பார்த்துப்பார்த்து
அறுதியே கூட்டியே சுட்டுக்கெட்டு
அடவாகப் பொய்சொல்லிச் சோறுமில்லா
குறுதிபோல் கக்கியே திரிவார்பாரு
குணமில்லார்க் கொன்றுமில்லை குறுக்குச்சொல்லி
நிறுதியாய்ப் பொய்சொல்லிப் புலம்புவார்கள்
நிலையில்லார்க் கொன்றுமில்லை நிலைமையாமே. (140)

நிலைமையா யிருந்துமே பாகமாக
நிறுத்தியே நூலதனைப் படித்துத்தேறி
அலையாமல் கைபாக வரிசைகண்டு
ஆதியாய்ச் செய்துமே கடையில்விற்பார்
உலையாமற் சாஸ்திரத்தைப் பேசுவார்பார்
உறுதிமிகச் சொல்லியே புலம்பிநிற்பார்
கொலைகளவு மிவ்வாதி செய்வாரப்பா
கூடாதே யென்வசனம் பொய்போகாதே. (141)

போகாதே சவுக்கார சுண்ணத்தாலே
புகழ்பெரியச் சகலசித்து மாடலாகும்
வாகாமல் வெடியுப்புச் செயநீராலே
வடிவான சரக்கெல்லாங் கட்டலாகும்
தாகாகத் துருசினுட சுண்ணத்தாலே
சகலசித்து மாடலாந் தடையோயில்லை
வேகாத காலேது சாகாக்காலு
வெந்தாக்கால் சுண்ணமெல்லாம் விருப்பமாமே. (142)

வெடியுப்புமோர்.

விருப்பமாய்ச் சவுக்காரம பலமும்பத்து
விதமான வெடியுப்புச் செயநீர்பத்து
அருப்பமாயிதுரெண்டுங் கலக்கிவைக்க
அன்பாகத் தயிர்போலே யிருக்கும்பாரு
குருப்பாக மத்தினால் கடைந்துபாரு
கொள்ளியே வெண்ணெய்தான் வருகுமக்காள்
இருப்பார்வை யாகவே வெண்ணெய்தன்னை
சீக்கிரமா யெடுத்துவைத்துச் செயலைக்கேளு. (143)



கேளுமே அடியில்நின்ற மோருதன்னை
செயமாகத் தாளகத்தில் சுருக்குத்தாக்கு
பாளுமே போகாதே சாமமொன்று
பதிவாகத் தாக்கியே ரவியிற்போட்டு
நாளுமே வெண்ணெய்தனை மேலேபூசி
நலமாகக் காயவைத்துப் பின்புநீயும்
வாளுமே சூடனுட தீயில்வாட்டு
வடிவம்போ லுருகியது மஞ்சளாமே. (144)

மஞ்சளாங் கரிதனிலே வைத்துருக்கு
வடிவாக ஓடாது ஒளித்திடாது
அஞ்சவே அரிதாரங் கட்டிப்போகும்
அடியான தாளகத்தின் கட்டுநாலு
தஞ்சமாய்க் குகையில்நின்று உருகும்போது
தாட்டிகமாய் நாலுக்கு ஒன்றுதங்கம்
வஞ்சமாய்த் தங்கமிடை நாகம்போடு
வடிவாகக் களங்காகும் வண்மையாமே. (145)

வண்மைநவ லோகம்ஆ யிரத்துக்கொன்று
வடிவாக யிட்டிடவே மாத்துக்கேளு
திண்மையாய் மாத்தது ஆயிரத்தியெட்டு
தடையில்லா தெல்லாம்நீ தாங்கிப்பாரு
உண்மையா விற்காதே சிலவாகாது
உறுதியாய் வைத்துமே பள்ளிதன்னில்
கண்மையாய்த் தொழுதிறைஞ்சிக் குரான்தன்னை
கருதியே பூசிக்கக் கருதுவாயே. (146)

கருதியே பூசித்துக் குளிகைதன்னை
கனமாக வாயில்வைத்துப் பார்க்கும்போது
வருதியே ஆயிரத்தி யெட்டுமாத்தை
வடிவாகக் கைதனிலே வைத்துநீயும்
உருதியாய் நபிமார்க ளுன்னைக்காண்பார்
உற்றுமே யிம்மாத்தைக் கண்ணிற்கண்டால்
பருதியே நபிமார்க ளுன்னைத்தானும்
பார்த்துமே தொழுவார்கள் பலன்சொல்வாரே. (147)

சொல்வார்கள் கைலாகு கொடுப்பாரப்பா
சுருதிபெற உபதேச மிகவுஞ்சொல்வார்
வெல்வார்கள் தானிருக்கு மிடந்தனைச்சொல்வா
விதமாக நிசஞ்சொல்வார் விருப்பமாக
நல்லோர்கள் போலவே பேசுவார்கள்
நானிலத்தி லுன்னைத்தான் நம்புவார்கள்
கல்லுமையாய் வேதங்கள் ரெம்பச்சொல்வார்
கனிந்துமே பலனுண்டாங் கணக்குமாமே. (148)

கணக்காகத் தானகத்தைக் கட்டிநீயும்
கனிவாக உருக்கியே தங்கஞ்செய்து
வணக்காகச் செந்தூரம் பண்ணக்கேளு
வடிவாகப் புகைநீரை விட்டுநீயும்
பணக்காக ஒருகோடி வித்தைக்காகும்
பதிவாகச் செந்தூரம் பண்ணிஉண்ணு
கணக்கமாய் காயசித்தி உடனேயாகும்
கண்டுரைத்தார் யாகோபு கருத்தில்தானே (149)

தானேதான் நூல்தனிலே யாகோபுசொன்ன
சரியான வாதத்தை நன்றாய்க்கண்டு
நானேநா னென்றுசொல்லப் பாகமாக
நாடியே வைத்துமே வேலைபாரு
கானகத்தி லிருந்துமே கண்டுகொள்ளு
கருதியே ஒருவேலை தெரிந்தபின்பு
ஊனேநீ காயசித்தி உடனேபண்ணு
உருதியா யாகோபு ஓதினாரே. (150)

ஓதினேன் சகலநூ லெல்லாம்பார்த்து
உற்றுமே கைபாக வரிசைகண்டு
நீதியாய் நிலையறிந்து செய்தாயானால்
நீணிலத்தில் ராசாவாம் நேர்மையாகும்
ஊதியே சரக்குகளை அனலிற்போட்டு
உறுதியாய் கொளுத்தினால் நாகமெய்தும்
வாதியாய்ப் பேரெடுக்க வேண்டாமப்பா
வடிவான பொன்னைத்தான் வாங்கார்தானே. (151)



வாமதார்கள் வாதங்கள் கிடைத்தபோது
வடிவாகப் பொய்யென்பார் மடையரப்பா
தூங்கியே வயித்தியன்போல் நின்றுநீயும்
துடியான வாதத்தைச் செய்துபாரு
ஏங்கியே திரியாதே நூலைப்பாரு
எளிதல்ல ரசவாதம் யிருந்துநீயும்
தாங்கியே ஊமைபோ லுண்டுபுத்தி
தாட்டிகமா யிப்புத்தி அறிவில்செய்யே. (152)

அறிவிலே வைத்துமே பொன்னைவிற்று
அடவாக ஒருவருக்குங் காட்டொண்ணாது
குறியாகக் கண்டானால் உன்னைத்தானும்
குடிகேடு செய்வார்கள் உலகரப்பா
[illegible]மாய்ச் சொல்லிவிட்டேன் தலைகள்போகும்
போக்கோடே புத்திகள்தான் மிகவுஞ்சொன்னேன்
வறியவர்போ லிருந்துமே வாதம்பாரு
வண்மைதான் யாகோபு வழுத்தினேனே. (153)

நூல்தொகுப்பு.

வழுத்தினேன் சுண்ணமென்ற காண்டந்தன்னை
வடிவாக அறுநூறு முன்னேபார்த்து
தழுத்தவே அதன்பின்னே மூன்னூர்பார்த்து
தடையறவே வரிவரியாய்ச் சோதித்தேறி
கழுத்திலே ஆபரணம் போட்டாப்போலே
கனிவாக நூற்றைம்பத் தைந்தையுந்தான்
பழுத்துமே பார்த்தும்பின் மற்றென்நூலை
பதிவாகப் பார்த்தாக்கால் பண்புமாமே. (154)

பண்பாக யிந்தநூத் தன்பத்தஞ்சில்
பதிவான சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
நண்பாகத் துருசினுட சுண்ணஞ்சொன்னேன்
நாடியே கைபாக வரிசைகண்டு
உண்பாகச் செய்துமே செந்தூரித்து
உடனுண்ணு காயசித்தி உடனேயாகும்
கண்பாகத் தங்கங்கள் மிகவுஞ்செய்ய
காதலா யாகோபு கருதினேனே. (156)

கருதியே அல்லாவைத் தொழுதுபோற்றி
கருத்துணர்ந்த நபிமாரைத் தொழுதுபோற்றி
வருதியே மகமதுவைத் தொழுதுபோற்றி
வடிவான வேதத்தைத் தொழுதுபோற்றி
உருதிபெறக் கருவாக யிந்தநூலை
உண்மையாய்ப் பாடிவிட்டே னுலகந்தன்னில்
இருதயத்திற் கற்றுணர்ந்தால் வாதமாகும்
எழுதினேன் நூற்றிஅன்பத் தைந்துமுற்றே. (156)

யாகோபு நபியார் அருளிச்செய்த

சுண்ணக்காண்ட சூஸ்திரம் கருரு,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# செந்தூரம் கருய-க்கு

# சுருக்கம் -ருய.

நித்தியமாய் நிறைந்தகுரு நபிமார்பாதம்
நிலைத்திற் போற்றியேநீ துதியேசெய்து
பத்தியுடன் நூத்தன்பத் தஞ்சுதானும்
பாருலகிற் பாடியே யதைச்சுருக்கி
புத்தியுட னன்பதாய்ப் பாடினேன்பார்
புகலரிய சத்துகளைப் பிரித்தேனின்னூல்
சத்தியமாய்ப் பார்ப்பவர்க்குச் சத்திலுள்ள
சரியான செம்பெடுப்பார் தரணியோரே. (1)

தாணிதனி லயச்செம்பு நெந்திச்செம்பு
தாக்கான காரீயச் செம்பினோடு
பரணிதனில் சொர்ணத்தின் செம்பினோடு
பதிவான யிவையெடுக்குங் கைபாகங்கள்
வாணியாய்ச் செந்தூரஞ் செய்யும்பாகம்
வாதிக்கி யின்னூலில் வரிசையாக
முரணியாய்ச் சொல்லிவிட்டேன் சுத்தியாக
முத்தியா யாகோபு மொழிந்தேன்யானே. (2)

மொழியென்ன உலகத்தில் வாதிமார்கள்
மோகமுற்று ரசவாதம் வேணுமென்று
பழியாகச் செம்பினுடன் கெந்திசேர்த்து
பகரவே உருக்கிடவே சத்துமாகும்
வழியாக யிச்சத்து தனைப்பிரித்து
வகையாகச் செம்பெடுக்க மாட்டாமற்றான்
கழிவாகச் செம்புவெள்ளி தன்னைச்சேர்த்து
களங்கிட்டு வாதியுமே காணார்தானே. (3)

காணுமற் கண்டுதான் செம்பெடுக்கக்
கருதியே அயச்செம்பு கருதிக்கேளு
நாணுமல் நல்லசெம்பு பலமும்பத்து
நல்லகுகை தன்னிலிட்டு உருக்கிக்கொண்டு
வாணுக அந்தயெட்டைப் பார்க்கும்போது
வண்மையாய்ப் பச்சைபோல் தெளிவாய்க்காணும்
தோணுக யிப்படியே சமையம்பார்த்து
தெரக்கவே செம்புனிடை கெந்திதானே. (4)

கெந்தியைத்தா னலாகப் பிரித்துக்கொண்டு
கெடியாக ஒருபங்கு செம்பில்தாக்கு
சந்தரமாய் கெந்தியது சுளித்துஉள்ளே
சொக்கியே யிருந்திடுக்காண் குகையைமூடு
முந்தியே உருகியது ஆடும்போது
முனிவாகக் குகைகொஞ்சந் தூக்கிவைத்து
நந்தியே சிலாகையால் குத்திப்பேறு
நலமாகத் தொய்யிபோற் கிளம்புமாமே. (5)

கிளம்புமென்ற சத்தெல்லாம் சிலாகையாலே
சேர்த்திபெறப் பின்புதான் மனியுருக்கி
தளம்புகளப் பின்புமொரு பங்குகெந்தி
தாக்கிட்டு மூடியபின் னுருகியாடும்
வளமாகக் குகையைத்தான் கொஞ்சந்தூக்கி
வைத்துமே சிலாகையால் பேத்துக்கொண்டு
தளமாக பின்னுமொரு பங்குகெந்தி
துடியாகக் கொடுத்துமுன்போல் பேர்த்துக்கொண்டே.

பேர்த்துமே யிப்படிக்கிச் சத்தையெல்லாம்
பெருமையாய் மாவாக்கிக் குகையிலிட்டு
சாத்துமே உருக்குமுகந் தன்னிற்றனும்
தாட்டிகமாய்ப் பொரிகாரங் கொஞ்சமிட்டு
பாத்துமே உருக்கிடவே சுத்தமாகும்
பதிவான சத்துவெங் கல்போலாகும்
தூத்துமே யிச்சித்துப் பெருமைதன்னை
சருணைபெற நபிமார்கள் கண்டார்தானே. (7)

கண்டுமே அடியாற்குச் சொன்னூர்சத்தை
காரணமாய்ச் செம்பெடுக்கச் சொல்லவில்லை
பண்டுமே சகலநூ லறிந்துபார்த்து
பதிவாகச் செம்பெடுத்து வேதைபோட்டேன்
முண்டுமே பண்ணுமல் சத்தைப்பார்த்து
மூடியமட்டுஞ் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
உண்டிடவே பாச்சிவிட்டுப் பொன்னைச்சேரு
உருதியாய்ப் பொன்னுகும் உத்துப்பாரே. (8)

உத்துப்பார் முன்செய்த சத்துதன்னை
உறுதியாய்ச் சேரொன்று கல்வத்திட்டு
சித்துப்பார் சந்தானி சேருஒன்று
சிரப்பாகப் பொரித்திடவே காலதாகும்
சித்துப்பார் யிரண்டாகப் பிரித்துக்கொண்டு
நலமாக ஒருபங்கு கல்வமிட்டு
சித்தியாய்ச் செவ்வல்லிப் பூச்சாராட்டிச்
சிரப்பாக வில்லைகட்டிக் கதிரிற்போடே. (9)

போட்டுமே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
பிரபலமாய்ப் புடமென்ன கோழியாகும்
தாட்டுமே யெடுத்துநீ கல்வமிட்டு
கனிவாகப் பொரித்தவெங் காரங்கூட்டி
நாட்டுமே முன்னீரா லரைத்துக்கொண்டு
நலமாக முன்போலே புடத்தைப்போடு
வாட்டுமே யிருத்துப்பார் பாதிரூபி
வகையாகச் சேத்துநீ பாணிவைத்தே. (10)

வைத்தியே அரைத்திட்டு ஜாமம்நாலு
உருதிபெற வில்லைகட்டிப் புடத்தைப்போட்டு
பார்த்துயெடு கல்வமிட்டுப் பின்புகேளு
பதிவாக அரைபொடியைப் பழச்சார்விட்டு
நாத்துமே மூணுநா ளூரவிட்டு
நலமாகப் புடம்போட்ட வில்லைக்குத்தான்
காத்துமே கால்வராகி சேர்த்துக்கொண்டு
கருணைபெறப் பழச்சாற்றிற் சாமமூன்றே. (11)

சாமந்தான் மூன்றரைத்து வில்லைகட்டிச்
சீரியாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
யேமந்தான் வெங்காரங் கொடுத்தசத்தை
எழுநூற்றில் சொல்லிவிட்டேன் குகையில்வைத்து
நாமந்தா னுருக்கிடவே சொன்னேன்பாரு
நலமில்லை குகையுருக்கிச் செப்புவீணும்
தாமசமில் லாமலே நாலத்திட்டு
தப்பாமல் மேலூத்தா யுருக்கிக்கொள்ளே. (12)

உருக்கிடவே செம்பாகுஞ் செம்புதன்னை
உத்துயெடு புதுக்குகையி விட்டுப்பின்பு
நருக்கிடவே யுருக்கிச்சாய் பஞ்சமித்ரம்
நலமாகச் செம்பாகுஞ் செம்புதன்னை
கருக்கிடவே நொருக்குவெள்ளி போடாமல்தான்
கனமான வெள்ளிதனை நாலத்திட்டு
வருக்கிடவே கொடுத்தூதி வங்கந்தன்னை
வகையாகக் கண்ணும்பு போலேவதே. (13)

வதியே யெடுத்துப்பார் ஈயம்போக
வதாட்டால் யீயமது போகாதாகும்
பாதியே செம்பைத்தான் கொடுத்தாயானால்
பரிவாகப் பழுக்காது பரிந்துபார்த்து
நாதியே துப்பரவா யூதிவெள்ளி
நலமாக நாலுக்கு ஒன்றுசெம்பு
கோதியே கொடுத்துருக்கி வதிப்போடு
குணமாகப் பொன்னெடைக்கி சேர்த்திடாயே. (14)

சேர்த்திடவே யிடைச்சமனாய்ச் சேர்த்துருக்கி
சிரப்பாக யெடுத்துப்பார் மாத்துயேழு
ஆத்திடவே புடமிடக்கும் லாபமாகும்
ஆதரவாய் வைத்திட்டுச் செலவுசெய்து
காத்திடவே நொருக்குவெள்ளி வைத்துக்கொண்டு
கனிவாக யிச்செம்பைக் கொடுத்துப்பொன்னை
நேத்தியாய்ச் சேர்த்திடவே தாயைப்போலே
நிசமாக பெட்டரைதா னாகும்பாரே. (15)



[illegible]மே முன்னூறு செந்தூரத்தில்
அடவாகச் சொன்னதுபோற் செந்தூரஞ்செய்து
ஏருமே கொடுத்திடவே ரெம்பலாபம்
ஏழைமதி போகமல் செய்துகொள்ளு
வாகுபெறத் தங்கமா மருவிப்பாரு
வடிவாக யிதப்பான் நினைவைவிட்டு
பாகுபெறச் செய்தாக்கால் பலனுமாகும்
பதிவான யாகோபு தான்சொன்னேனே. (16)

தானென்ற சத்திநுட கிராசச்செம்பு
தடையறவே சொல்லிவிட்டேன் தன்மைபாரு
வானென்ற அயச்செம்பு மார்க்கங்கேளு
வகைபான துருசியது பலமும்பத்து
[illegible]ன்ற கெந்தியது பலமுமொன்று
காரணமாய் வீரமது பலமுங்கால்தான்
நானென்ற பழச்சாறு விட்டுஆட்டி
நலமாக மூவேழு திரனாளாட்டே. (17)

ஆட்டியே வில்லைகட்டி கதிரில்வைத்து
ஆனபின்பு உப்புநேர் சுண்ணங்கூட்டி
வாட்டியே அரைத்துமே வில்லைமேலே
வகையாகக் கவசமிட்டுப் புடத்தைப்போடு
நாட்டியே சொல்லாமல் கவசந்தன்னை
நலமாகப் பிரித்துமே தள்ளிப்போட்டு
கூட்டியே உள்ளிருந்த மருந்துதன்னை
குணமாகப் பார்த்திடவே கருப்புமாமே. (18)

கருப்பாக வுள்ளிருந்த மருந்தினோடே
கருப்பியைத்தான் வில்லைக்கி அரைக்கால்சேரு
துருப்பாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
துப்பரவா யரைத்துவில்லை கதிரில்காய
நறுப்பாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
நலமாகச் சந்தாணி பொரிகாரத்தை
வெறுப்பாகச் சேர்த்துமே அரைத்துப்போடு
விதமாக விப்படிக்கிப் புடமுமஞ்சே. (19)

புடமைந்து போட்டவுட னெடுத்துநீயும்
பேசாமல் குகையில்வைத்து உருக்கவேண்டாம்
திடமாக நாளத்தில் வைத்துநீயும்
திட்டமா யுருக்கியெடு திரமாஞ்செம்பு
வடமாகச் செம்புதானு சத்தியாகும்
வடிவமென்ன பிச்செம்பை மதியிலெட்டு
கடமாக ரெண்டிட்டு உருக்கிப்பின்பு
கருத்தாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே.

கண்டுபார் மாத்தெட்டு உள்ளபொன்னை
கருத்தாக இடைசேர்த்து உருக்கித்தீரு
வண்டுபார் சீவனத்துக் கிடமேயாகும்
வகையாக மூன்றாறில் சொன்னேனப்பா
துண்டுபா ரிச்செம்பில் தங்கம்சேர்த்து
துடியாக உருக்கியே தகடாய்த்தட்டி
வண்டுபார் ரத்தமொடு கெந்திசேர்த்து
வடிவாக வீரமுமே கூடச்சேரே.

கூடவே சேர்த்தவுடன் சொல்லக்கேளு
குமரியாஞ் சோரதிலே விட்டுஆட்டி
ஆடவே தகட்டிற்கு மேலேபூசி
ஆடவாகப் புடம்போடச் சிவந்துபோகும்
நாடவே மதிதனிலே இருயதுக்கொன்று
நாட்டிடவே தசமாத்தாம் நாடிப்பாரு
வாடவே பாகத்தை வகையாய்க்கண்டு
வடிவாகச் சேர்த்திடவே வழக்கமாமே.

வழக்கமாஞ் சத்துக்குத் துருசுவேணும்
வகையான கெந்திதா னயமும்வேணும்
தழக்கமாஞ் செம்புதான் பிரிக்கவேருய்
தடையில்லாச் சந்தாணி கொடியோன்வேணும்
பழக்கமா யிவைகூடாய் போனதாலே
பழிகாரச் செம்பதுவும் பாரிலில்லை
கழக்கமாய்ச் சத்துவகை போட்டுப்போட்டு
காரண்மாய்ப் பொய்யாகு மென்பார்பாரே.



பாரப்பா னிர்மூட வாதிதானும்
பதிவாக ஒன்றோடே ஒன்றைச்சேர்த்து
நேரப்பா பெரும்பிடியாய்ப் போட்டுப்போட்டு
நிலைக்கவில்லை யென்றுமே சொல்லிச்சொல்லி
தூரப்பா திரிவார்க ளலைந்துசுத்தி
துடிவாக மாத்தில்லை யென்பார்தேசி
ஆரப்பா வென்னைப்போலே சொல்லமாட்டார்
அறிவில்லா மூடர்களே அறிந்துபாரே. (24)

நாகச்செம்பு.

அறிந்துபா ரின்னமொரு நாகச்செம்பு
அடைவாகச் சொல்லுகிறே னறிந்துகேளு
செறிந்துபார் துருசதுவும் பலமும்பத்து
திறமான கெந்தியது பலமும்பத்து
பறிந்துபார் எலுமிச்சம் பழச்சார்விட்டு
படிவாக நாளாறு அரைத்துச்சேர்த்து
கறிந்துபார் வில்லைகட்டிக் கதிரில்வைத்து
[illegible] கட்டே (25)

கூட்டியே வில்லைக்கி அரைத்துக்கட்டி
குணமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாட்டிலே சொல்லாதே கறுத்துப்போகும்
நலமாகக் கல்வமிட்டுச் சந்தாணிகூட்டி
வாட்டியே அரைத்துவிடு பழச்சாற்றாலே
வளமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
மாட்டியே புடம்போடு அஞ்சுதானும்
வழிவாக யெடுத்தபின்பு பாகங்கேளே. (26)

பாகமென்ன சொல்லுகிறேன் பாகங்கேளு
பதிவாக நாரசம் உடனேசேர்த்து
வேகமாய்வில்லைக்கிக் காணுமாகும்
விருப்பமாய்ப் பழச்சாறுவிட்டுஆட்டி
ஆகமாய்க்கதிரில் வைத்துக்காயப்போடு
அடைவாகஉப்புநேர் தன்னைக்கூட்டி
நேர்மையாய்ப்புடம்போட்டு யெடுத்துப்பாரு
தன்மையா யாகோபுதாக்கினரே. (27)

தாக்கியேயெடுத்துப்பார் மஞ்சளாகும்
தடையறவே குகையிலிட்டுருக்கிப்பாரு
நோக்கிப்பார்பொன்போலே கண்விட்டாடும்
நுட்பமாய்ச்செம்பெடுத்து மதியிற்பத்து
வாக்கிப்பார்ரெண்டிட்டுத் தங்கங்கேளு
வடிவாகயிடை சமனாய்ச்சேர்த்துநீயும்
பாக்கியமாயூதியெடு பதிவாம்பொன்னு
பலனாகயாகோபு பதிந்தவாரே.

பதிவாகநாகத்தின் செம்பினோடே
பலனாகத்தங்கமது யிடையேசேர்த்து
கதியாக உருக்கிமெள்ளத் தகடாய்த்தட்டி
கணக்காகநாத்தமுடன் கெந்திசேர்த்து
விதியாகக்கல்வமிட்டு அரைத்துநீயும்
விதமாகப்பூசியே புடமூன்றிட்டால்
நிதியாக நொருங்கியே தூளுமாகும்
நீணிலத்தில் யாகோபு சொன்னவாரே.

சொன்னதொரு நொருங்கியதோர் குருவைத்தானும்
சுருதிபெற மதியெட்டில் ரெண்டுதாக்கு
நன்னயமாய்த்தங்கமது பாதிசேரு
நலமாக ஆணிக்கி யெட்டேயாகும்
இன்னிலத்தில் பிழைப்பாகு மிந்தவேலை
இதமாக ரிஷிமார்க ளறியமாட்டார்
கன்னல்போற் சொல்லிவிட்டேன் கருணைவைத்து
கருத்துணர்ந்து யாகோபு கண்டவாரே.

கண்டுயெடு நாகத்தின் செம்புதன்னை
கதிபெறவேபொன்னாகும் ஆணிக்கொக்கும்
தொண்டுபடும்வேலை யெல்லாமதன்பின்பாரு
தொல்லுலகில்ரசவாதம் நிலைக்கும்பாரு
மண்டுரிஷிமார்கள் தானறியமாட்டார்
பத்தியாய்க்கண்டிடவே பலனுமாகும்
முண்டுதான்பண்ணுமவன் னூல்தன்னை
முழுதுமேசோதித்தா லுறுதியாமே.



[illegible]றுதியாய்மட்டத்தில் பொன்னுதானும்
உண்மையாய்சேராதால் மாத்துமில்லை
அறுதியாம்வாதிமா ரலைந்துகெட்டார்
அடைவாகவலையாம லாண்மைகண்டு
கறுதியாப்பெண்ணுடனே ஆணுஞ்சேர்ந்த
தன்னையொக்குமட்டத்தில் பொன்னுசேர்ந்தால்
கறுதியேபிள்ளையாம் பலனுமாகும்
லகைகண்டயாகோபு கருணைதானே. (32)

கெந்தகச்செம்பு.

தானென்றகெந்தியுட செம்பைக்கேளு
தனகரத்னமானதொரு கருத்தைவைத்து
நானென்றதுருசதுவும் பலமும்பத்து
நளினமாய்க்கெந்தியது பலமும்பத்து
வானென்றபழச்சாறு விட்டரைத்து
வகையாகயிருசாமஞ் சென்றபின்பு
கானென்றவில்லைதட்டிக் கதிரில்வைத்து
கனிவாகயாகோபு கருவாய்த்தானே. (33)

கருவாக வில்லைக்கிக் கவசங்கேளு
கனிந்துமேஉப்பிட்டுச் சுண்ணஞ்சேர்த்து
வருவாகவாட்டியே கவசங்கட்டி
வலுவாகப்போட்டெடுக்கக் கரியாய்நிற்கும்
தருவாகயெடுத்துமே காரங்கூட்டி
தகுந்ததோரொரு மணியாகயுருக்கிக்கொண்டு
விரும்பியேயிப்படிக்கிக் காரங்கூட்டி
வேண்டியேயரைத்துப் புடமிட்டிடாயே. (34)

இட்டிடவேயிப்படிக்கிக் காரங்கூட்டி
இதமாகக்கொடியோனைப் பாதிசேர்த்து
கட்டிடவேஅரைபாணி தன்னாலாட்டி
கனிந்துமேயிப்படிக்கிப் புடமுமிட்டு
புட்டிடவேயெடுத்துருக்கச் செம்புமாகும்
பதிவாகபஞ்சமித்திரத்திற் சாய்த்து
கொட்டிடவேசெம்பெடுத்து வைத்துக்கொள்ளு
கோடிகவரோடமது குணமாய்த்தானே. (35)

குணமாகக்கருக்கன் வெள்ளிதன்னைத்தானும்
குரூரமாய் வங்கத்தை ஒட்டிவெட்டி
தணமாகக்குடுத்தூதத் தங்கம்போலாம்
தாக்கிடவேயெடுத்துமே வைத்துக்கொண்டு
கணமாகமதியேழு செம்புமூனு
கரையத்ததங்கமதை யிடையேசேரு
வணமாகமாத்தென்ன யெட்டுமாகும்
வடிவானயாகோபு சொல்லுவாரே.

சொல்லுவாரிச்செம்பை வைத்துக்கொண்டு
சுருதிபொருபிமாரைத் தோத்தரித்து
நல்லவாரமட்டமிடை பொன்னைச்சேர்த்து
நலமாகப்பிழைக்கவே சொன்னேன்பாரு
கல்லுவார்சிறிதுபேர் செம்பெடுத்து
கருதுவார்வெள்ளிதனிற் கொடுத்துப்பார்த்து
அல்லுவார்மாத்தில்லையென்றுசொல்வார்
அடவாகக்கையூணைக் காணார்தானே.

கையூணுக்காரணமென்ன மட்டமாச்சு
காரணமாம்பொன்னுதான் தாயுமாச்சு
வையகத்திலிரண்டுமே சேர்த்துநீயும்
வகையாகவுருக்கிப்பார் லாபமாகும்
மெய்யாகயிம்மொழிகள் நிசமதாகும்
விருதாவாய்ப்பார்த்தாக்கால் பலனுமில்லை
சையோகஞ்செய்வதுபோல் பாகம்பாரு
தவித்திடாச்செய்துநீ பாகம்பாரே.

பாகமாய்மட்டத்தில் பொன்னைரெம்ப
பரிவாய்ச்சேர்த்தாக்கால் பலனுமாகும்
ஆகமாம்புடத்துக்குத் தங்கந்தானும்
அருகுகட்டிப்போகாதைப் படவும்வேண்டாம்
யூகமாய்ப்பார்த்துமே செய்துகொண்டு
உடனுயிர்போல்வேண்டியே யுகந்துசெய்ய
போகமாய்ப்பெருவாழ்வு வருகும்பாரு
புத்தியுள்ளோர்வாதிமாம் புலஸ்தியனே.



புகலவேநீதன் பூச்சி கொஞ்சங்கொஞ்சம்
புகட்டியேதேனெடுத்து ரெம்பச்சேர்க்கும்
அகலவேமட்டமதில் தங்கத்தாயை
அடைவாகமிதக்கவே சேர்த்துக்கொண்டால்
நகலவேஜூலிக்கிக் கூர்மையாகும்
நலமாகுங்குத்துமில்லை காட்டுள்ளோர்க்கு
சக்லமுந்தான் பாடுபட்டால்பலனுமாகும்
சரியாகயாகோபு சொன்னவாரே. (40)

சொன்னதொருமுன்னேதான் வயித்தியந்தானும்
சுருதியாயெழுநூறுங் களங்குஞ்சொன்னேன்
நன்னயமாய்வைத்குருக்கிச் சத்துமார்க்கம்
நலமாகரெண்டுமுன்னூறு காட்டினேன்யான்
இன்னிலத்திலதைக்குருக்கி நூத்தன்பத்தைந்தாய்
இருந்துரைத்தேன் நூத்தன்பதுங்குருக்கி
கன்னல்போலன்பதாய்ப் பாடினேன்யான்
[illegible]ப்பார்த்தாக்கால் சித்தர்தானே. (41)

சித்தராய்ப்போகவே சுண்ணக்காண்டம்
சிறப்பாகஅறுநூறு பாடல்சொன்னேன்
முத்தாயென்பாடல் சகலத்திற்கும்
மும்மூர்த்திசாவியைப்போல் முன்னூர்தன்னில்
நித்தியமாயித்திரத்தின் மார்க்கமோடு
நிலையாகப்புடமார்க்கம் எரிப்பின்மார்க்கம்
சத்துகிரமரிதலொடு குறிப்பின்மார்க்கம்
சாங்கமாயெல்லாமுந் துகையாய்ச்சொன்னேன். (42)

சொன்னதொருநூலெல்லாம் பாண்டமாகும்
சுருதியா மித்திரத்தின் முன்னூற்தானும்
கன்னல்போல் தடியாகும் பார்த்துத்தேரு
கருதியே தானுழைத்துப் பலனைக்காண்பாய்
முன்னமே சத்தைத்தான் பண்ணித்தேர்ந்து
முக்கியமாய்ச் செம்பெடுத்து மதியித்சோத்து
நன்னயமாய் மட்டமிடை தங்கஞ்சேர்த்து
நாடியே வித்திடவே நிலவுக்காமே. (43)

ஆமென்ற பின்னமொரு செப்புமார்க்கம்
அறைகிறேன் சுபிமார்க ளறியக்கேளு
சமென்ற நல்லசெம்பை உருக்கிக்கொண்டு
கருத்தாக யிந்திடைக்கிக் கெந்திதாக்கு
வாமென்று வாங்கியது சத்துமாகும்
வகையான சத்தெடுத்துப் பலமுமெட்டு
தாமென்ற வீரமது பலமுங்காலாம்
தடையறவே யிட்டுமே பாணிவிட்டே. (44

விட்டுமே யரைத்துப்பார் மஞ்சல்போலாம்
விதமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நட்டுமே வில்லைதான் காய்ந்தபின்பு
நலமான உப்பதுவைக் கவசங்கட்டி
பட்டுமே காடையென்ற புடத்திலிட்டு
பதிவாக வெடுத்துமே கல்வத்திட்டு
சட்டுமே புடம்போட்ட யிடைக்கிக்கேளு
சுழிவான கருப்பியைத்தான் ஊறப்போடே (45

ஊரவே எலுமிச்சம் பழச்சாற்தன்னில்
உற்பலமாய் நாளாறு சென்றபின்பு
காரவே முன்போட்ட மருந்தினோடே
கருத்தாலே சேத்தரைத்துப் பழச்சார்தன்னில்
சாரவே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நலமாகக் கோழியென்ற புடத்திலிட்டு
வாரவே வெங்காரம் பாதிசேர்த்து
வகையாக யரைத்துவில்லை கட்டிடாயே. (46

கட்டியே புடம்போட்டு வெடுத்துப்பாரு
கருணைபொச் சிவந்திடுமே வில்லைதன்னை
தட்டியே சாவலையில் வைத்துருக்கு
தனிச்செம்பு தருமே யிந்தச்செம்பு
பட்டியே கடைசிதனில் சொல்லிப்போட்டேன்
பதிவான சுபிமார்க ளாடுஞ்செம்பு
தட்டியே செம்பெடுத்து வெள்ளிதன்னில்
தடியாகப் பச்சைவெள்ளி தன்னில்தேனே. (47



தன்னிலே எட்டிரண்டு போட்டுருக்கி
தடையறவே எட்டரைமாத்துப்பொன்னை
பன்னியே சேத்துருக்கு தாய்போலாகும்
பதிவான வாசமுமே நல்லசெம்பு
கன்னியமாய்ப் பார்க்குமந்தச் செம்பைவைத்து
கதிபெறவே சிலவுசெய்து சுபிமார்போல
முன்னியே யிருந்துவிடு யாகோபுசொன்னார்
முடிவான அன்பதையு முணர்ந்துபாரே. (48)

உணர்ந்துபார் கெந்தியுடன் துருசுச்செம்பு
உத்துமே சேர்த்துவிடச் சத்துமாகும்
கணர்ந்துமே சத்திலுள்ள செம்பைத்தானும்
காரணமாய்ப் பொரிகாரி பண்ணைசேர்த்து
வளர்ந்துமே புடம்போடுச் செம்புருககி
வகையாக மதியெட்டில் தாக்குவீறாய்
தணர்ந்துமே யேமமதை இடையேசேர்த்து
[illegible]வே பொன்னாகுர் தன்மைபாரே. (49)

தன்மையா யிருந்துமே செம்பைகண்டு
தாட்டிக மாயெடுத்துச் சார்வுபார்த்து
உண்மையா யொருவருக்குஞ் சொல்லாமல்தான்
உத்துமே செய்துமே முடித்துநீயும்
பண்மைபார் வணக்கம்பார் நினைவைகண்டு
வடிவாக மனமதுவைச் சோதித்தேதான்
கண்மைபார் செம்பதுவைப் போசித்துப்பார்
கருதியே யாகோபு கருணைதானே. (50)

கருணைபா ரயச்செம்பு சாஸ்த்திரத்தில்
கருத்தாகச் சொல்லவில்லை நானுங்கண்டு
வருணைபார் மக்காவின் தேசம்புக்கி
வடிவாக நூலெல்லாஞ் சோதித்தேதான்
ருணமா யிந்தநூல் தன்னிற்தானும்
தடையறவே சொல்லியிட்டேன் சார்ந்துபார்த்து
[illegible]ணையாய் கைபாக வரிசைபாடி
[illegible]தியாக யாகோபு பதிவாய்த்தானே. (51)

பதிவாகப் பொன்னில்லா வாதமெல்லாம்
பதியைவிட்டு யெரிகனவிடு பாரிமேலார்க்கே
கெதியாகத் துருசில்லாச் சத்துவெல்லாம்
கெட்டியாய்த் தூரயெரி கேள்வியாலே
விதியாகச் சத்துதனில் செம்பைத்தானும்
விதமாக யெடுக்காதால் விளக்கமில்லை
சதியாகக் கைபாக வரிசையில்லாச்
சதியான பாகமெல்லாந் தடையுமாமே.

தடையில்லா என்னூலை முழுக்கப்பார்த்து
சஞ்சலத்தை விட்டுமே படித்துத்தேரு
படையில்லா வேலையெல்லாம் பொய்யதாகும்
பாத்திட்டுச் செய்யாதாற் பலனுமில்லை
விடையில்லாக் குகைபாகம் பருவங்கண்டு
விதமான உலைபோடும் விதமறிந்து
அடையான உலைக்கூடங் கருணைபார்த்து
காதலாய்ச் செய்திடவே கண்டுபாரே

கண்டில்லா நூலினுட மர்மங்கண்டு
காதலாய் குணபாகங் கருத்தைப்பூண்டு
வண்டிக்கி ரெம்பவுந்தான் சேர்த்துச்சத்து
வடிவான செம்பெடுத்து வழக்கங்கண்டு
பண்டில்லா மனம்போல நினைவாயெண்ணி
பதிவாகப் பார்த்திட்டு பதிவுகண்டு
தண்டித்து வேலைசெய்தாற் பாகமாகும்
தாட்டிகமா யாகோபு தாக்கினாரே.

தாக்கியே யிந்தநூ லன்பத்தஞ்சும்
சரிவரவே பார்த்திட்டுப் படித்துக்கொண்டு
நோக்கியே மனதிலெண்ணிச் சோதித்தேறு
நோக்கரிய பாகமது கண்டுவுஞ்சும்
பாக்கியமாம் பாடலைத்தான் [illegible] பார்த்து
பார்த்துநீ பதிவாகக் கண்டுபின்பு
வாக்கினிலே நினைத்திட்டுச் [illegible]கொள்ளு
வடிவான யாகோபு யின்[illegible]ல்முற்றே.

செந்தூரம் கரும[illegible] சருக்கம் [illegible]

முற்றிற்று.